Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 8.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 | திருவள்ளுவர் ஆண்டு: 2036 மார்கழி 12 | ஹிஜ்ரி 1428 துல்கதா 24 | (27.12.2005) | செவ்வாய்க்கிழமை | இதழ் 88

விமானம் மற்றும் கப்பல் மூலம்
உள்நாட்டு வெளிநாட்டிற்கான சிறியதோ, பெரியதோ,
எந்த அளவுகளிலான பொதிகள், கடிதங்களை
எந்த நாட்டிற்கும் எந்தநேரமும்
குறைந்த கட்டணத்தில் அனுப்பிட
மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு 20 % விசேட சலுகை
லண்டனுக்கான 5 Kg பொதிக்கு 1 Kg க்கான கட்டணம் 500/=
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். (Opposite All Ceylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் (பலநோக்கு கூ.ச.முன்பாக) Tel - 021 222 7560 Fax - 021 222 7310
36, செல்லப்பிள்ளையார் கட்டடம், பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி. Tel - 021 226 4252 Fax - 021 226 4253
குகன் தொலைத்தொடர்பகம் 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். Tel - 021 22 2027 Fax - 021 226 2993



# சுனாமியால் உயிரிழந்தோருக்கு தமிழர் தாயகமெங்கும் அஞ்சலி

யாழ்ப்பாணம் —

கடந்த வருடம் இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தால் உயிரிழந்த பல்லாயிரக்கணக்கான உறவுகளுக்காக தமிழர் தாயகப் பகுதிகள் எங்கும் கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தப்பட்டது.

சுனாமியால் உயிரிழந்தவர்களின் முதலாம் ஆண்டு நினைவுதினம் நேற்று வடமராட்சிப் பிரதேசத்தில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

வடமராட்சி வடக்கில் பிரதான நிகழ்வு பருத்தித்துறை முனை புனித தோமையப்பர் தேவாலயத்தில் வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச ஏற்பாட்டில் பொது முகாமையாளர் கே.சூரியகுமார் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரம்மஸ்ரீ எஸ். வைத்திய நாதக்குருக்கள், பருத்தித்துறை பங்குத்தந்தை அருட்திரு பயஸ் இருதயதாஸ் அடிகள், நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன், சர்வோதயம் அமைப்பின் யாழ். பிராந்திய அமைப்பாளர் எஸ். சிவசுப்பிரமணியம் ஆகியோர் கலந்துகொண்டு அஞ்சலியுரை நிகழ்த்தினர்.

சுனாமியால் உயிரிழந்த உறவுகளின் நினைவாக - சுனாமி தாக்கிய நேரமான காலை 9.10 மணிக்கு பொதுச்சுடரை நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசன், சமாச பொதுமுகாமையாளர் கே.சூரியகுமார், சமாசத் தலைவர் பொன் பொஸ்கோ, உப தலைவர் தனபாலசிங்கம், சர்வோதயம் அமைப்பாளர் எஸ்.சிவசுப்பிரமணியம் ஆகியோர் இணைந்து ஏற்றிவைத் தனர்.

இதன்பின்னர் வடமராட்சி வடக்கு, கிழக்கில் உயிரிழந்தோரின் நினைவாக 1600 சிட்டி விளக்குகளில் தீபங்கள் உறவினர்கள், உரித்துடையோரால் ஏற்றிவைக்கப்பட்டது. தொடர்ந்து கடலில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த கடற்கலங்களில் சிட்டிவிளக்குகளில் தீபம் (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஜோசப் எம்.பியின் படுகொலை சமாதான முயற்சியை பாதிக்கும்!

## தமிழ் தேசியக் கூட்டமைப்பு எச்சரிக்கை

கொழும்பு —

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலை - சமாதான முயற்சிகளில், அரசாங்கம் கொண்டுள்ள ஈடுபாட்டிலும், அதன் நேர்மைத் தன்மையிலும், பாரிய சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியிட்ட கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

சமாதான முயற்சிகளின் நெருக்கடியான காலகட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்டுள்ளார். அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே இவர் படுகொலை செய்யப்பட்டார். இவரின் இந்தப் படுகொலை சமாதான முயற்சிகளில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

இராணுவ புலனாய்வுப் பிரிவினர் மற்றும் ஒரு சாராருடன் சேர்ந்தியங்கும் தமிழ் ஆயுதக் குழுவினரால் (12 ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் சூட்டுக்கு இரு இளைஞர்கள் பலி!

மட்டக்களப்பு —

## மாமனிதர் ஜோசப் வித்துடலுக்கு நாளை கிளிநொச்சியில் அஞ்சலி!

## குடாநாட்டில் நேற்றும் கிரனேட் தாக்குதல்கள்!

யாழ்ப்பாணம் —

## படையினரின் சூட்டுக்கு இரு இளைஞர்கள் பலி!

மட்டக்களப்பு

மட்டக்களப்பு - சந்திவெளியில் நேற்றுக்காலை இரண்டு தமிழ் இளைஞர்கள் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஏறாவூருக்கு 9 கிலோ மீற்றர் வடக்கே சந்திவெளிக்கும் மொறக்கொட்டாஞ்சேனைக்கும் இடையில் உள்ள ரயில் பாதையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

படையினர் மீது (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஓட்டோ சாரதிகள் இருவர் திருமலையில் சுட்டுக்கொலை

திருகோணமலை

திருகோணமலை மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரண்டு ஓட்டோச் சாரதிகள் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கிண்ணியாவில் நேற்றுமுன்தினமிரவு 7.45 மணியளவில் ஓட்டோ ஒன்றை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு சென்ற இனந்தெரியாதோர் அதன் சாரதியை சுட்விட்டுத் தப்பிச் சென்றனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் (12 ஆம் பக்கம் பார்க்க)


## சிரேஷ்ட புளொட் உறுப்பினர் வவுனியாவில் சுட்டுக் கொலை

வவுனியா

வவுனியாவில் புளொட் அமைப்பின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் நேற்று மாலை இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டதுடன், இன்னொருவர் படுகாயமடைந்தார்.

நேற்று மாலை 5.30 மணியளவில் வவுனியா நகரிலிருந்து ஒரு கிலோ மீற்றர் தொலைவிலுள்ள இறம்பைக்குளத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. (12 ஆம் பக்கம் பார்க்க)

# மாமனிதர் ஜோசப் வித்துடலுக்கு நாளை கிளிநொச்சியில் அஞ்சலி!



மட்டக்களப்பு

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் வித்துடல் நாளை மக்களின் இறுதி வணக்கத்துக்காக கிளிநொச்சிக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது.

கிளிநொச்சியில் இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்களும் பொறுப்பாளர்களும் போராளிகள் மற்றும் பொது மக்கள் வீரவணக்கம் செலுத்தவுள்ளனர்.

மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் வித்துடல் நேற்றுக்காலை வவுணதீவு ஊடாக கொக்கட்டிச்சோலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு கொக்கட்டிச்சோலை இராமகிருஷ்ண (12 ஆம் பக்கம் பார்க்க)

# அரச ஊழியர்கள் பகிஷ்கரிப்பு; அலுவலகங்கள் செயலிழந்தன!

யாழ்ப்பாணம்

யாழ்.குடாநாட்டில் படையினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் வன்முறைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் -

இராணுவ வன்முறைகளை நிறுத்தி பொது மக்களின் இயல்பு வாழ்வை ஏற்படுத்தக் கோரியும், அரச ஊழியர்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் கோரி- அரச திணைக்களங்களின் ஊழியர்கள் நேற்று பகிஷ்கரிப்பு போராட்டத்தில் குதித்தனர்.

அரச ஊழியர்கள் முழுமையாகப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டதால் அரச அலுவலகங்களும், திணைக்களங்களும் முற்றாக ஸ்தம்பிதமடைந்திருந்தன.

யாழ்.செயலகம், பிரதேச செயலகங்கள் மற்றும் திணைக்கள அலுவலகங்கள் என்பன முடங்கிக்கிடந்ததால் இங்கு தமது தேவைகளை நிறைவேற்றச் சென்ற பொதுமக்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றதை அவதானிக்க முடிந்தது.

அதேவேளை நேற்று தபால் திணைக்களம், சுகாதாரத் திணைக்களம், போக்குவரத்து உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகள் மட்டும் இடம்பெற்றன.

தமது கோரிக்கை நிறைவேற்றப்படும் வரை அரச ஊழியர்கள் பகிஷ்கரிப்பு போராட்டத்தை தொடர்ந்து மேற்கொள்ளவிருப்பதாக தெரிவித்துள்ளனர். (91)

## குடாநாட்டில் நேற்றும் கிரனேட் தாக்குதல்கள்!

யாழ்ப்பாணம்

யாழ்.குடாநாட்டில் நேற்றும் படையினர் மீது ஆங்காங்கே குண்டுத்தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

நேற்று பிற்பகல் 2 மணியளவில் கொடிகாமம் நகரில் உள்ள கவலரண் ஒன்றின் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் காயமுற்றதாகக் கூறப்பட்டபோதும் - (12 ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் கொன்ஸ்டபிள் சுட்டுக் கொலை!

மட்டக்களப்பு

மட்டக்களப்பு - புதுநகரில் நேற்று அதிகாலை பொலிஸ் காவலரண் மீது தாக்குதல் நடத்தப்பட்டதில் பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் கொல்லப்பட்டார்.

நேற்று அதிகாலை 1.[illegible]0 மணியளவில் இடம்பெற்ற இந்தத் தாக்குதல் சம்பவத்தில் படுகாயமடைந்த கருணாரத்ன என்ற பொலிஸ் கொன்ஸ்டபிளே மட்டக்களப்பு (12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.குடாநாட்டில் இன்று துக்கதினம்!

யாழ்ப்பாணம்

தொடரும் இராணுவ அடாவடித்தனங்களைக் கண்டித்தும், இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட அப்பாவிப் பொதுமக்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும் இன்று யாழ். குடாநாடெங்கும் பூரண துக்கதினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் இதற்கான அழைப்பை (12 ஆம் பக்கம் பார்க்க)

# படையினரின் கண்மூடித்தனமான தாக்குதல்களாலேயே இறுதிப்பரீட்சைகளை ஒத்திவைக்கும் நிலை ஏற்பட்டது

## தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியம் தெரிவிப்பு

**பொதுமக்கள், மாணவர்கள் மீது இராணுவத்தினர் கண்மூடித்தனமாக நடத்தி வரும் தாக்குதல்களால் ஏற்பட்டிருக்கும் பதற்றமான சூழ் நிலையால் பரீட்சைகளை ஒத்தி வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.**

**தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களின் அனைத்து கற்கை நெறிகளின் இறுதிப் பரீட்சை ஒத்தி வைக்கப்பட்டமை தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-**

நாம் இன்று கூட எமது உயிர்களைப் பணயம் வைத்தே தொழில்நுட்பக் கல்லூரிக்கு வருகை தர வேண்டிய அச்சமான நிலையில் இருக்கின்றோம். எமது மாணவர்கள் இராணுவத்தினர் இல்லாத பாதைகளை தேடியே தமது பிரயாணத்தை மேற்கொள்ள வேண்டி உள்ளது. குடாநாட்டின் முக்கிய கல்வி மையமாகிய யாழ். பல்கலைக்கழகத்தில் கடந்த 19, 20 ஆம் திகதிகளில் நடைபெற்ற காடைத்தனமான இராணுவ அராஜகங்கள் பற்றி அறியாதவர்கள் எவருமில்லை. இந்தச் சம்பவங்கள் நடைபெறும் போதும் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் செய்வதறியாது திகைத்து ஓடியமையும், எமது பட வரைஞர் கற்கைநெறி மாணவன் கைது செய்யப்பட்டு மிலேச்சத்தனமாக இராணுவத்தினரால் நையப் புடைக்கப்பட்டமையும் இதற்கு முன்னர் நாம் அறியத்தந்தவையே.

எமது மாணவர்கள் குடாநாட்டில் எதிர் நோக்கும் பிரச்சினைகளை பட்டியற்படுத்தி அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய பொறுப்பு எமக்குண்டு. அறிக்கைகளை வெளியிடுபவர்கள் யார் என்பதை தேடித் திரிந்து தாக்குவதற்கும், கைது செய்வதற்கும் என்றே இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும், அடிவருடிகளும் அலைவது வேதனைக்கும், கண்டனத்துக்கும் உரியது. தொழில் நுட்பக் கல்லூரியின் கற்கை நெறிகள் தொழில் அடிப்படையிலானவையாகையால் தூரப் பிரதேசங்களிலிருந்தே பல மாணவர்கள் தொழில் நுட்பக் கல்லூரிக்கு வருகை தருகின்றனர் என்பதே உண்மை.

குடாநாட்டில் அண்மைக் காலமாக இராணுவத்தினர் தமது சோதனை நடவடிக்கைகளை போக்குவரத்து செய்யும் மாணவர்கள் மற்றும் மக்கள் மீது தீவிரப்படுத்தி உள்ளதுடன், மாணவர்கள் என தம்மை அடையாளம் காட்டியவர்கள் மேல் மிக மோசமாகத் தாக்குவதுடன், அச்சுறுத்தி கைது செய்யவும் முயல்வதால் அவர்களின் மனநிலை பாதிக்கப்படுவதுடன், செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர். குடாநாட்டின் எப்பகுதியிலாவது அசம்பாவிதம் நடைபெற்றது எனக் கூறி ஏனைய பகுதிகளிலும் இராணுவ அச்சுறுத்தல் வீதி எங்கும் நடைபெறுவதுடன், மாணவர்கள் மேல் கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்தப்படுகிறது.

வெளிமாவட்ட மாணவர்களும் தாம் தங்கியுள்ள அறைகளில் தமக்கு உள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக குடாநாட்டை விட்டு வெளியேறி தமது மாவட்டங்களுக்கு சென்றுள்ளனர். இதனால் இவர்களும் பரீட்சைக்கு தோற்றுவது கேள்விக் குறியாகவே உள்ளது.

குடாநாட்டில் இராணுவ மிலேச்சத்தனமான அராஜகங்களை கண்டித்து குடாநாடு தழுவிய துக்கதினம் அனுஷ்டித்து எமது இரத்த உறவுகளின் அநியாய அழிப்பை சர்வதேசம் அறியச்செய்வோம். அரச ஊழியர்கள் தமது உயிரின் உத்தரவாதம் கருதி தமது அரசகருமங்களை நேற்றுமுதல் புறக்கணித்துள்ளனர். இதனால் குடாநாடு ஸ்தம்பிதம் அடையும் நிலையில் உள்ளது.

அண்மைக்காலமாக குடாநாட்டில் இராணுவத்தால் நடாத்தப்பட்ட கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகம் காரணமாக எமது அப்பாவி பொது மக்கள் உயிரிழந் தமையை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

தொழில் நுட்பக் கல்லூரிக்கு அண்மையில் உள்ள இராணுவப் புலனாய்வுத் துறையின் அப்பக்கடை முற்றாக அகற்றப்பட்டு இராணுவத்தின் புலனாய்வு அச்சுறுத்தல் நீக்கப்படவேண்டும்.

குடாநாட்டு மாணவர்கள் மேற்படி நடவடிக்கைகளால் கடும் மன உளச் சலுக்கும், நடைமுறைச் சிக்கல்களுக்கும் உள்ளாகி உள்ளனர். இதனால் எமது இறுதிப்பரீட்சைகளை முற்றாக ஒத்திவைப்பது என முடிவெடுத்துள்ளோம்.

சகோதர தொழில் நுட்பக்கல்லூரியான திருகோணமலைத் தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்துக்குள் இராணுவ முகாம் இடப்பட்டு சோதனை நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதுடன், புலனாய்வு நடவடிக்கைகளும் முடுக்கி விடப்பட்டுள்ளன. எனவே அங்குள்ள மாணவர்கள் தமது கல்விச் செயற்பாடுகளையும், இறுதிப் பரீட்சை நடவடிக்கைகளையும் முற்றாகப் பகிஷ்கரித்து முகாம் அகற்றும் வரை போராட்டத்தில் குதித்துள்ளனர். இவற்றை முற்றாக நிறுத்த எமது தொழில் நுட்பக் கல்லூரியும், கிழக்கு கல்விச் சமூகத்துடன் ஒன்றிணைகின்றது. அத்துடன் கிழக்கில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டமையை வன்மையாகக் கண்டிப்பதுடன், எமது தமிழ் மக்களின் எழுச்சியையே இவை மேலும் வலுப்படுத்தும் என்பதை இனவாதிகளுக்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

எனவே வரலாறு காணாத வெற்றி ஒன்றை எட்ட தமிழ் மாணவர்களின் ஒற்றுமையை ஒன்று திரட்டி எமது கல்விச் சுதந்திரத்தை உறுதிப்படுத்த எமது வலய 4 தொழில் நுட்பக் கல்லூரிகள் யாவும் முற்றாகப் பகிஷ்கரிப்பதோடு, இராணுவ அராஜகத்துக்கு நிகரான மாற்று வழியை தேடவேண்டிய நிலை அவசர அவசியமாகிவிட்டது.

எனவே மாணவர்கள் நாங்கள் அணிதிரண்டு ஒரே குரலில் எமது வலயம் 4 தொழில் நுட்பக்கல்லூரிகளுக்கு சாதகமான ஒரு பதிலை சம்பந்தப்பட்ட தரப்பினரும் எமக்குரிய அமைச்சும் இராணுவ அதிகாரிகளும் விரைவாக வழங்கவேண்டும் என ஆணித்தரமாக வேண்டிநிற்பதோடு,அதுவரை எமது பரீட்சைகளை ஒத்திவைப்பது எனவும் முடிவெடுத்துள்ளோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாமனிதர் ஜோசப் படுகொலை ஈடுசெய்யமுடியாத பேரிழப்பு!

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமகாராசா

யாழ்ப்பாணம் —

மூத்த தமிழ் அரசியல் வாதியும், தமிழ் உணர்வாளரும், நீண்ட காலம் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து மக்கள் சேவையில் தன்னை பிணைத்துக் கொண்டவருமான ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்ட செய்தியானது ஆழ்ந்த அதிர்ச்சியையும், சோகத்தையும் ஏற்படுத்தும் நிகழ்வாகும்- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் இழப்பு தொடர்பாக முன்னாள் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தெல்லிப்பளை ப.நோ.கூ.சங்கத் தலைவருமான சி.சிவமகாராசா தெரிவித்துள்ளார்.

இது ஒரு ஈடுசெய்யமுடியாத இழப்பு. தமிழ்த் தேசியத்திலும், தேசியத் தலைமையிலும் அசைக்க முடியாத பற்றும், நம்பிக்கையும் கொண்ட மாமனிதர் ஜோசப் கிறிஸ்மஸ் பிரார்த்தனையின் போது கொல்லப்பட்டமையானது மிலேச்சத்தனமான செயலாகும்.

இப்படுகொலையைச் செய்தோரின் நோக்கம் எதுவாக இருந்தாலும் இதன் மூலம் அவர்கள் தமது அரசியல் அநாகரிகத் தன்மையை பகிரங்கப்படுத்தியுள்ளார்கள் என்றே கூற வேண்டும்.

மாமனிதராகிவிட்ட ஜோசப் அவர்களின் தமிழுணர்வையோ, மக்களிடையே அவர்பெற்றிருக்கும் அபரிமிதமான செல்வாக்கையோ எ தக் கொடிய சக்தியாலும் பிரித்துவிட முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# போர்நிறுத்த உடன்பாட்டை படையினர் மீறிவிட்டனர் வடமராட்சி தமிழ் மாணவர் ஒன்றியம் குற்றச்சாட்டு!

யாழ்ப்பாணம் —

தமிழ் மக்கள் மீது நடத்திவரும் தாக்குதல்களை நிறுத்து! இல்லையேல் எமது மண்ணில் நீ பிணமாகப் போகிறாய். கடந்த சில நாட்களாக தமிழ் மக்களது இயல்பு வாழ்க்கையைச் சிதறடித்து, யுத்த நிறுத்த உடன்படிக்கையை சிங்களப்படைகள் அப்பட்டமாக மீறிவருகின்றன. இதனால் நாம் பொறுமை இழந்து சிங்களப் படையின் அராஜகத்தை அடக்கத் தயாராகி விட்டோம் என -வடமராட்சி கிழக்கு மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

பொதுமக்கள் மீதான தாக்குதல்கள், கெடுபிடிகள் தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

யுத்த காலத்தில் தமிழர் தாயகப் பகுதிகளில் சிங்களப் படைத்தரப்பால் பெண்ணினத்துக்கெதிராக இழைக்கப்பட்ட கொடுமைகள் தற்போது சமாதான காலத்திலும் தொடர்ந்த வண்ணமேயுள்ளது.

யுத்த காலத்தில் கணவனைக் கண் முன்னே கொல்லல், கூட்டுப் பாலியல் வல்லுறவுகள், சித்திரவதைகள், அங்கச் சிதைவுகள் கொலைகள் எனப் பெண்கள் சிதைத்துச் சீரழிக்கப்பட்டார்கள். கர்ப்பிணிப் பெண்ணின் வயிற்றை கிழித்து இன்னும் பிறக்காத சிசுவை நசுக்கிக் கொல்லும் சம்பவங்கள் கூட தமிழர் தாயகப் பகுதியில் சாதாரணமாக நடைபெற்றன.

பாடசாலை மாணவி கிருஷாந்தி, குடும்பப்பெண் கோணேஸ்வரி, இந்துமதக் குருக்களின் மனைவி சாரதாம்பாள், இளம்பெண் ரஜனி போன்ற பெண்மணிகளுக்கு சிங்களப் படைத் தரப்புக் காடைக் கும்பலால் மேற்கொள்ளப்பட்ட வெறித்தனக் கொடூரங்கள் வெளிச்சத்துக்கு வந்தபோது மானிடமே தலைகுனிந்து கொண்டது.

இந்தக் கோரச் செயலுக்கு அமைதி வழியில் ஆர்ப்பாட்டம் செய்த பொது மக்கள் மீது படையினர் கண்மூடித் தனமான தாக்குதல்களை மேற்கொண்டுள்ளார்கள்.

சிங்களப் படையின் அராஜகத் தனங்களை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு தெரிவிக்க அமைதி வழியில் பேரணியாக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் தலைமையில் சென்றோரையும் படையினர் விட்டுவைக்கவில்லை.

யாழ்.குடாநாட்டில் முதுகெலும்பாக விளங்கும் யாழ்.பல்கலைக் கழக சமூகத்தினர் மீது சிங்களப்படை கைவைத்ததனால் பொறுமை இழந்து சிங்களப் படையின் அராஜகத்தை அடக்கத் தயாராகி விட்டோம். நாம் இனியும் பகடைக்காய்கள் அல்ல. மாணவர்கள் தாங்களைத் தாங்களே தற்காத்துக்கொள்ள தயாராகிவிட்டனர். எனவே தான் சிங்களப் படைக்கு இது ஓர் எச்சரிக்கை. உடன் அராஜகச் செயல்களை நிறுத்து! இல்லையேல் எமது மண்ணில் நீ பிணமாகப் போவாய் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (12)

# பொதுமக்கள் மீதான படுகொலையை கண்டித்து இன்று திருகோணமலையில் பூரண ஹர்த்தால்

## பொங்கு தமிழ் சமூகம் அழைப்பு

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை மற்றும் அப்பாவி தமிழ் மக்கள் மீது இராணுவத்தினர் திட்டமிட்டு நடத்தி வரும் தாக்குதல்கள், படுகொலைகளைக் கண்டித்து இன்று திருகோணமலையில் பூரண ஹர்த்தாலும், துக்க தினமும் அனுஷ்டிக்க திருகோணமலை மாவட்ட பொங்குதமிழ் குழாம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மூத்த தலைவர்களில் ஒருவரும், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், எமது தேசத்தின் விடுதலைக்காக தன்னை முற்றுமுழுதாக அர்ப்பணித்துப் பணிபுரிந்தவருமாகிய மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்டமை,

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார் ஆகிய தாயகப் பிரதேசமெங்கும் அரச படைகளாலும், தேச விரோத ஒட்டுப் படைகளாலும் வஞ்சகமான முறையில் தமிழ் பேசும் மக்கள் படுகொலை செய்யப்பட்டமை,

யாழ்.புங்குடுதீவில் எமது தமிழ் சகோதரி பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு மிருகத்தனமாக படுகொலை செய்யப்பட்டமை,

சமாதான ஒப்பந்தத்திற்கு முரணான வகையில் திருகோணமலை தொழில்நுட்பக் கல்லூரியினுள்ளும், ஏனைய கல்விக் கூடங்களுக்கு முன்பும், கோவில்கள், தேவாலயங்களுக்கு அருகிலும், வீட்டு வாசல்களிலும், பார்க்குமிடமெங்கும் கொண்டு வந்து குவித்து அவசரகாலச் சட்டத்தின் கீழ் மனித உரிமை மீறல்களில் ஈடுபடும் படையினரை உடனடியாக முகாமுக்குள் அனுப்பக் கோரியும்,

இன்று பூரண கதவடைப்புச் செய்து கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டு எமது ஒன்றுபட்ட எதிர்ப்பினை சர்வதேசத்திற்கும், அரசிற்கும் தெரிவிப்போம். அன்றையதினம் உந்துருளிகள், துவிச்சக்கரவண்டிகள் உட்பட எந்த போக்குவரத்தும் நடைபெறக் கூடாது எனவும், அரச திணைக்களங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், தனியார் கல்விக் கூடங்கள், வர்த்தக நிலையங்கள், சந்தை, தியேட்டர், வங்கிகள் உட்பட அனைத்து நிறுவனங்களும் பூரணமாக மூடப்பட வேண்டுமெனவும், எவ்வித வன்முறைக்கும் இடங்கொடாது அகிம்சை வழியில் எமது போராட்டம் இடம்பெற வேண்டுமெனவும்,

கதவடைப்பு என்பது ஒரு கேளிக்கை நிகழ்வல்ல. இது எமது உணர்வின் வெளிப்பாடு. எனவே, தேவையற்ற விதத்தில் முச்சக்கர வண்டிகள் உந்துருளிகள், துவிச்சக்கர வண்டிகள் என்பவற்றில் ஓடித்திரிந்து தேவையற்ற பதற்றத்தை உருவாக்க வேண்டாமென்றும், படையினரைத் தவிர வேறெவரும் வீதியில் நிற்கக் கூடாதெனவும் அன்புடனும், தாழ்மையுடனும் கேட்டுக் கொள்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (10,04)

# தொண்டை நோயால் அவதிப்பட்ட சிறுமி நேற்றுக்காலை உயிரிழப்பு!

வடமராட்சி —

தொண்டை நோயினால் அவதிப்பட்டு வந்த சிறுமியொருவர் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் உயிரிழந்தார்.

வட்டதெனி அல்வாய் வடக்கைச் சேர்ந்த மெதடிஸ்த பெண்கள் உயர் தர பாடசாலை மாணவியான சரவணபவான் பிரியணி (வயது 13) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த சில தினங்களாக இவர் தொண்டைநோ எனக் கூறி வந்த நிலையில் நேற்று அதிகாலை பெற்றோரிடம் நீர்கேட்டதாகவும், அவர்கள் குளிர்சாதனப் பெட்டியிலிருந்து சோடா ஒன்றை கொடுத்துள்ளனர். இதனை குடித்த அவருக்கு உடல் சோர்வடையவே அவரை உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார்.

பருத்தித்துறை மாவட்டவைத்தியசாலையில் பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டபின்னர் சடலம் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது.(12)

# பொதுமக்களைப் படுகொலை செய்வதன் மூலம் தமிழரின் உணர்வுகளை அடக்கிவிட முடியாது!

## பூநகரி தேசிய எழுச்சிப் பேரவை தெரிவிப்பு

பூநகரி —

தொடர்ச்சியாக வன்முறைகள் கொலைகளை கட்டவிழ்த்து விடுவதால் வீறு கொண்டு எழுந்து நிற்கும் தமிழினத்தை அடிபணியச்செய்ய முடியாது என பூநகரி பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை தெரிவித்துள்ளது.

யாழ்.குடாநாட்டில் தமிழ்மக்கள் மீது இராணுவத்தினர் நடத்திவரும் கண்மூடித்தனமான தாக்குதல்கள், படுகொலைகள், கைதுகளை கண்டித்து வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

மன்னாரில் நால்வர் வெட்டிக்கொலை, யாழ். நகரில் ஐவர் சுட்டுக்கொலை, மட்டு நகரில் நத்தார் தின ஆராதனையின் போது புனித தேவாலயத்தினுள் புகுந்து தமிழ் தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜ சிங்கம் காட்டுமிராண்டித் தனமாக சுட்டுக்கொல்லப் பட்டமையும், ஏனையோர் சுட்டுக்காயப் படுத்தப்பட்ட இந்தச் செயல்களைச் செய்த அரச படைகளினதும் ஒட்டுண்ணிக் குழுக்களினதும் அடாவடித்தனமான செயல்களை வன்மையாகக் கண்டிக்கிறோம். இதுபோன்ற சம்பவங்கள் மென்மேலும் இடம்பெறின் முழுத் தமிழினமுமே வீறு கொண்டு எழுவதைத் தடுக்க முடியாது எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தென்னாபிரிக்காவில் பேச்சு; திட்டமிடுகின்றாராம் மகிந்த!



கொழும்பு

போர்நிறுத்த உடன்பாடு தொடர்பாக ஆசியாவில் பேச்சுக்களை நடத்த விடுதலைப் புலிகள் மறுப்புத் தெரிவித்திருப்பதால் - தென்னாபிரிக்காவில் இந்தப் பேச்சுக்களை நடத்துவது குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆலோசனை நடத்தி வருவதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சர்வதேச சமூகத்தினரால் விடுதலைப் புலிகளாலும் அரசாங்கத்தாலும் அனுசரணையாளராக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நோர்வே நாட்டில் தான் முதல் கட்டப் பேச்சுக்கள் நடைபெறவேண்டும் என விடுதலைப் புலிகள் உறுதியாகத் தெரிவித்துள்ளனர்.

ஆசிய நாடு ஒன்றில் பேச்சு என்ற அரசாங்கத்தின் கோரிக்கையை விடுதலைப் புலிகள் முற்றாக நிராகரித்து விட்டதை அடுத்து தென்னாபிரிக்காவில் பேச்சுக்களை நடத்த அழைப்பு விடுப்பதென்று மகிந்த ராஜபக்ஷ முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இதனிடையே நோர்வே அல்லது ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் தலைநகரம் ஒன்றில் நடைபெறும் பேச்சுக்களில்தான் விடுதலைப் புலிகள் பங்குபற்றுவர் என்ற எமது நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கிறோம் என்றும், அரசாங்கம் இது தொடர்பாக தனது முடிவுகளை ஏன் அடிக்கடி மாற்றுகிறது என்பதை எம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை என்றும் விடுதலைப் புலிகளின் ஊடக ஒருங்கிணைப்பாளர் தயா மாஸ்டர் தெரிவித்ததாக அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

# அத்துரலிய ரத்தன தேரர் யுத்தமுனைக்கு செல்லவேண்டும்

## ஐ.தே.க வலியுறுத்தல்

கொழும்பு

ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்னதேரர், துட்டகைமுனு அரசனின் காலத்தில் பௌத்த பிக்குகள் பின்பற்றிய வழியில் துறவி வாழ்க்கையை தற்காலிகமாகத் துறந்து வடக்கின் யுத்தகளத்துக்கு செல்லவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி கோரியுள்ளது.

இந்தக் கோரிக்கையை நாடாளுமன்ற உறுப்பினர் ஹேமகுமார நாணயக்கார விடுத்துள்ளார்.

துட்டகைமுனு அரசனின் காலத்தில் தேரவாத பௌத்தத்தைப் பின்பற்றிய பிக்குகள் துறவறத்திலிருந்து விலகி போருக்கு சென்று பின்னர் மீண்டும் தமது துறவறத்தை மேற்கொண்டு முத்தியடைந்தனர்.

இந்த நிலையில் தென்னிலங்கையில் வாக்குகளுக்காக மக்களை ஆவேசப்படுத்தும் கருத்துக்களை வெளியிட்டுவரும் ஜாதிக ஹெல உறுமயவின் அத்துரலிய ரத்ன தேரருக்கு பணிவான வேண்டுகோள் -

நீங்களும் தற்காலிகமாகவேனும் துறவறத்திலிருந்து விலகி வடக்குக்குச் சென்று யுத்தம் புரிந்து வெற்றியைத் தேடிக் கொடுப்பதன்மூலம் முக்தியைப் பெறவேண்டும் என அவர் தெரிவித்தார்.

# திருமலையில் சூடு; ஊர்காவலர் காயம்

திருகோணமலை

திருகோணமலை - லிங்கநகரில் ஊர்காவற்படையைச் சேர்ந்த ஒருவர் இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை இரவு 11.30 மணியளவில் லிங்கநகர் 43 ஆவது ஒழுங்கையைச் சேர்ந்த மயூரகுமார (வயது 22) என்பவரே சுடப்பட்டவராவார்.

ஓட்டோ சாரதியான இவர் பயணிகளை இறக்கிவிட்டு வீட்டுக்கு திரும்பிக்கொண்டிருந்த வேளை - மோட்டார்சைக்கிளில் பின் தொடர்ந்து வந்த இனந்தெரியாத நபர்கள் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு தப்பிச்சென்றதாகக் கூறப்படுகிறது. (04)

# ஜோசப் எம்.பி படுகொலையை மகிந்தவும் கண்டிக்கிறாராம்!

கொழும்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்டதென்ற செய்தி அறிந்ததும் தான் அதிர்ச்சியடைந்ததாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் -

நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலை குறித்த செய்தி கிடைத்ததும் சகலவித உதவிகளையும் வழங்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார். சம்பவத்தில் காயமடைந்த திருமதி பரராஜசிங்கத்திற்கு உச்சகட்ட வைத்திய வசதிகளை வழங்குமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ்மா அதிபருக்கும் மாவட்ட செயலாளருக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

சபாநாயகருடன் கலந்துரையாடிய ஜனாதிபதி - ஜோசப் பரராஜசிங்கத்தின் இறுதி நிகழ்வுகளில் பங்குபற்றவிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு போக்குவரத்து வசதிகள் வழங்கப்படவேண்டுமெனவும் உத்தரவிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தனுடன் தொடர்புகொண்ட மகிந்த ராஜபக்ஷ, தனது அனுதாபங்களைத் தெரிவித்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் -

இந்தப் படுகொலை தொடர்பான பூரண விசாரணையை நடத்த விசேட புலனாய்வுக் குழுவொன்றை நியமிக்குமாறு அரசாங்கம் பொலிஸ்மா அதிபருக்குப் பணித்துள்ளது.

தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடல்களை நடத்திய பின்னர் அவர்களுக்கு மேலதிக பாதுகாப்பு வழங்கப்படுமென ஜனாதிபதி தெரிவித்துள்ளார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பேசாலையில் காணாமற்போன

# நான்கு பேரின் சடலங்கள் எரிந்த நிலையில் மீட்பு!

மன்னார்

மன்னாரில் கடந்த 23 ஆம் திகதி கடற்படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை அடுத்து பேசாலைப் பகுதியில் காணாமற்போன நான்கு வயதுச் சிறுவன் உட்பட நால்வரின் சடலங்கள் எரிந்து கருகிய நிலையில் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டன.

கடற்படையினரின் வாகனத் தொடரணி தாக்கப்பட்டதை அடுத்து பேசாலைப் பகுதியிலிருந்து யூட் திரேசா, அவரது நான்கு வயது மகனான யூட் நிலக்சன் மற்றும் இம்மானுவேல் குரூஸ், அவரது மனைவி அந்தோனிக்கா ஆகிய நால்வரும் காணாமற் போயிருந்தனர்.

இந்தநிலையில் - நேற்றுமுன்தினம் நூறு வீட்டுத் திட்டப் பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து எரிந்த நிலையில் காணப்பட்ட மனித உடல் எச்சங்கள் - அந்தப் பகுதிக்கு விஜயம் செய்த மாவட்ட பதில் நீதிவான் ஜோன் தாஸன் முன்னிலையில் பொலிஸாரால் சேகரிக்கப்பட்டன. இது தொடர்பாக அந்தப் பகுதி மக்களிடமும் பதில் நீதிவான் விசாரணைகளை நடத்தினார்.

காணாமற்போன இவர்கள் கடற் படையினரால் கைதுசெய்யப்பட்டு வெட்டியும், சுட்டும் எரிக்கப்பட்டிருக்கலாமென சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

இந்த எச்சங்களில் சிறு பிள்ளையினதும், பெரியவர் ஒருவரினதும் தனித்தனிக் கால்களே கிடந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை - நூறு வீட்டுத் திட்டம் பகுதியிலுள்ள வீடுகளிலிருந்த பொருட்கள் அனைத்தும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் பொலிஸாரிடமும், அதிகாரிகளிடமும் முறையிட்டுள்ளனர்.

இதனிடையே கடந்த இரண்டு நாட்களாக மன்னாருக்கும் தலைமன்னாருக்கும் இடையிலான போக்குவரத்தை தடைசெய்திருந்த படையினர் வீதியைத் திறந்துவிட்டனர்.

இதனையடுத்து கடற்படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவ இடத்திற்கும், அருகிலுள்ள வீட்டுத்திட்டப் பகுதிக்கும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர், மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப், மன்னார் நகர கடற்படைத் தளபதி, பொலிஸார், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் அதிகாரிகளும் சென்று பார்வையிட்டனர்.

# புலிகள் மீது பழிபோடுவது அரசின் அபத்தமான செயல்!

## இரா.சம்பந்தன் கடும் கண்டனம்



திருகோணமலை

நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தை விடுதலைப் புலிகள் கொலை செய்தார்களென குற்றம் சுமத்துவது அபத்தமான விடயமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் பி.பி.சி. தமிழோசைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

இந்த நாட்டின் நிலைமைகளை அறிந்து உணர்ந்து கொண்டவர்கள் விடுதலைப் புலிகள் தான் இந்தக் கொலையைச் செய்தார்கள் என்ற கருத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அரசாங்கம் இவ்வாறான குற்றச்சாட்டைச் சுமத்துவது புத்திசாலித்தனமான விடயமல்ல.

விடுதலைப் புலிகளே ஜோசப் பரராஜசிங்கத்துக்கு மாமனிதர் கௌரவத்தை வழங்கியுள்ளனர். எனவே இந்தக் கொலையை அவர்கள் செய்தார்கள் என்பதை எவரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

சற்று சிந்திக்கக்கூடியவர்கள், புத்திசாலித்தனமானவர்கள் கூட இதனை ஏற்கமாட்டார்கள்.

அரசாங்கம் இவ் விதமான செயல்களில் ஈடுபடாமல் உண்மையை வெளிக்கொணர்வதற்கு தீவிரமான, உறுதியான விசாரணைகளை மேற்கொள்ளவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன் எனத் தெரிவித்தார்.

# அமைச்சருக்கு இந்தியாவில் அனுமதி மறுப்பு

கொழும்பு

அமைச்சர் அமீர் அலிக்கு இந்தியாவுள் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் கீழக்கரைக்கு செல்வதற்காக அமைச்சர் அமீர் அலியும் அவருடன் ரிசாத் பதியுதீனும் சென்றனர். திருவனந்தபுரம் விமானநிலையத்தில் சார்க் நாடுகளுக்கான விசாவை உரிய அதிகாரிகளிடம் அமீர் அலி எடுத்துக்காட்டினார். ஆனால் அந்த விசா டிசம்பர் 21 ஆம் திகதியுடன் முடிவடைந்துவிட்டதால் அமைச்சர் அமீர் அலியை அனுமதிக்க திருவனந்தபுரம் விமான நிலைய அதிகாரிகள் மறுத்துவிட்டனர்.

அவருடன் சென்ற ரிசாத் பதியுதீனின் விசா ஆவணங்கள் சரியாக இருந்ததால் அவருக்கு அனுமதி அளிக்கப்பட்டது.

# ஜெயலலிதாவை சந்திக்கிறார் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ!

கொழும்பு

இந்திய பயணம் மேற்கொள்ளும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமிழக முதல்வர் ஜெயலலிதாவையும் சந்திக்கவுள்ளார். மகிந்த தலைமையிலான குழு இன்று இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்கிறது. அமைச்சர்கள் மங்கள சமரவீர, ரோஹித போகொல்லாகம, வடிவேல் சுரேஸ், ஏ.எச்.எம்.பௌசி, பேரியல் அஷ்ரப், ஹெல உறுமயவைச் சேர்ந்த உதய பிரபாத் கம்மன்பில ஆகியோரும் இக்குழுவில் இடம் பெறுகின்றனர்.

புதுடில்லி செல்லும் இக்குழு இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், பாதுகாப்பு, வெளிவிவகார அமைச்சர்கள் மற்றும் காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி ஆகியோரை சந்திக்கவுள்ளனர்.

புதுடில்லி சந்திப்புக்களை முடித்துக் கொண்டு கேரளாவின் தலைநகரான கொச்சி செல்லும் அங்கு இலங்கையில் முதலீடு செய்யும் நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

பின்னர் சென்னையில் தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதாவை மகிந்த குழு சந்திக்கவுள்ளது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் இந்தியாவில் மகிந்த தலைமையிலான குழுவுடன் இணைந்துகொள்வார் என்று கூறப்படுகிறது.

# சமஷ்டியை ஏற்றால் மட்டுமே இலங்கைக்கு இந்தியா உதவும்

## சுப்பிரமணியம் சுவாமி கூறுகிறார்

சென்னை


சமஷ்டியை ஏற்பதாக இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவித்தால் மட்டுமே இலங்கைக்கு இந்தியா உதவ வேண்டும். என சுப்பிரமணிய சுவாமி வலியுறுத்தியுள்ளார்.

தற்போதைய ஒற்றையாட்சி முறைக்குப் பதிலாக சமஷ்டி அரசியலமைப்பை ஏற்றுக்கொள்வதாக இலங்கை ஒரு தலைப்பட்சமாக அறிவித்தால் மட்டுமே அதற்கு இந்தியா உதவியளிக்கும் என்று இலங்கை ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷவிற்கு மத்திய அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும் எனவும் ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி கேட்டுக்கொண்டுள்ளார்.

ஜனநாயகக் கூட்டமைப்பில் தமிழர்களுக்கு அவர்களுக்குரிய பங்கை வழங்குவதைத் தாமதப்படுத்தும் ஒரு சதியாக விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களை சிங்கள பெரும்பான்மையினர் மிக நீண்ட காலமாக பயன்படுத்தி வருகின்றனர்.

விடுதலைப் புலிகள் இணங்குவதை உறுதிப்படுத்த 1987 இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் கண்காணிப்பாளராக இந்திய படைகளை அனுப்பிய பின்னர் அவர்களுடன் போரிடுவதற்கு ஜனாதிபதி பிரேமதாஸ புலிகளுக்கு பணமும் ஆயுதமும் வழங்கினார். அதனால் இலங்கை விடயத்தில் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் இந்திய மத்திய அரசை சுப்பிரமணிய சுவாமி கோரியுள்ளார்.

# நெல், பொலக்கின் பந்துவீச்சில் திணறியது அவுஸ்ரேலிய அணி



மெல்பேர்ன் —


மெல்பேர்னில் நேற்று ஆரம்பமான தென்னாபிரிக்க அணிக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலிய அணி நெல் மற்றும் பொலக்கின் பந்துவீச்சில் திணறியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்ரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தொடங்கியது. ஸ்கோர் 2ஆக இருந்தபோது தொடக்க வீரர் ஜக்கஸ், பொலக்கின் பந்தில் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.


இதன்பின்னர் ஹைடன் - பொண்டிங் ஜோடி நிதானமாக ஆடி நின்று பிடித்தது. ஸ்கோர் 154ஐ எட்டியபோது - ஹைடனின் விக்கெட்டை பொலக் வீழ்த்தினார். 177 பந்துகளில் 9 பவுண்டரிகளுடன் 65 ஓட்டங்களை எடுத்த ஹைடனுக்குப் பதிலாக ஹொட்ஜ் களமிறக்கப்பட்டார்.

ஆனால் ஸ்கோர் 176 ஆக இருந்த போது அவரும் பொலக்கின் பந்தில் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இந்தநிலையில் ஸ்கோர் 207ஐ எட்டியபோது, அணித் தலைவர் பொண்டிங் நெல்லின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். இவர் 198 பந்து



களில் 13 பவுண்டரிகளுடன் 117 ஓட்டங்களை எடுத்தார். அதே ஸ்கோரில் வந்தவேகத்திலேயே நெல்லின் பந்



தில் சைமன்ஸ் ஆட்டமிழந்து சென்றார்.


தொடர்ந்து களமிறங்கிய கில்கிறிஸ்ட் 2 ஓட்டங்களுடனும், வோன் 9 ஓட்டங்களுடனும் நெல்லின் பந்தில் அடுத்தடுத்து ஆட்டமிழக்க அவுஸ்ரேலிய அணி தடுமாறியது.

ஸ்கோர் 239 ஐ எட்டியபோது லீ 4 ஓட்டங்களுடன் என்ரினியின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். 8 விக்கெட் இழப்புக்கு 239 ஓட்டங்களைப் பெற்றநிலையில் முதல் நாள் ஆட்டம் இடைநிறுத்தப்பட்ட போது - ஹூசே 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது இருந்தார்.

பந்துவீச்சில் நெல் 4, பொலக் 3, என்ரினி 1 விக்கெட்டை வீழ்த்தினர்.

# நியூஸிலாந்துடனான தொடரில் சிறப்பாக விளையாடுவேன்

## இப்படிக் கூறுகிறார் ஜெயசூர்ய



கொழும்பு —

நியூஸிலாந்துக்கு எதிரான தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவேனென நம்பிக்கை தெரிவித்துள்ளார். இலங்கை அணியின் முன்னாள் கப்டன் சனத் ஜெயசூர்ய.

இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தியதால், டெஸ்ட் தொடரிலிருந்து அவர் நீக்கப்பட்டார். இதற்காக இலங்கை முழுவதும் கண்டனக் குரல்கள் ஒலித்தன.

இதையடுத்து, நியூஸிலாந்து மற்றும் அவுஸ்ரேலியாவில் நடைபெறும் முத்தரப்பு தொடருக்கான இலங்கை அணியில் அவர் சேர்க்கப்பட்டார்.

இந்த நிலையில் கொழும்பில் செய்தியாளர்களிடம் கூறியதாவது -

நியூஸிலாந்துக்கு எதிரான ஒரு நாள் தொடரில், ரசிகர்கள் பெருமைப் படும்படியான ஆட்டத்தை வெளிப்படுத்துவேன். இனிமையான நாடு

## விளையாட்டு

நியூஸிலாந்து. அங்குதான் 15 ஆண்டுகளுக்கு முன்பு எனது கிரிக்கெட் வாழ்க்கையைத் தொடங்கினேன். மறக்கமுடியாத அனுபவம் அது.

நியூஸிலாந்து அணிக்கு எதிரான முன்னைய ஒருநாள் தொடரில் நிறைய வெற்றிகளைப் பெற்றுள்ளோம். அதே மாதிரியான முயற்சி இப்போதும் தொடருமென நம்புகிறேன்.

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் நீக்கப்பட்டேன். அணியிலிருந்து வெளியேறுவதை யாரும் விரும்பமாட்டார்கள். என்றாலும் அந்த இடைவெளி, எனது திறமையை மேம்படுத்திக்காட்ட உந்துதலாக அமைந்துள்ளது. அணிக்குத் திரும்பியுள்ளது மகிழ்ச்சியளிக்கிறது என்றார் ஜெயசூர்ய.

இதேவேளை, எதிர்வரும் 31ஆம் திகதி முதல் நியூஸிலாந்து அணியுடன் 4 ஒருநாள் போட்டிகளில் இலங்கை அணி பங்கேற்கவுள்ளது.

கடந்த ஆண்டு இலங்கையை சுனாமி தாக்கியபோது இலங்கை அணியினர் நியூஸிலாந்தில் விளையாடிக் கொண்டிருந்தனர். பேரழிவை அறிந்ததும் போட்டியைக் கைவிட்டு உடனடியாக நாடு திரும்பினர். இந்தப் போட்டிகளின் தொடர்ச்சியே இப்போது நடைபெறவுள்ளது.

நியூஸிலாந்து தொடர் முடிந்ததும் இலங்கை அணி அவுஸ்ரேலியாவுக்குச் செல்லவுள்ளது. அங்கு ஜனவரி 13 முதல் முத்தரப்பு தொடரில் பங்கேற்கவுள்ளது. தென்னாபிரிக்கா அந்தத் தொடரில் பங்கேற்கும் மூன்றாவது நாடாகும்.

HIGH SPEED INTERNET BROWISING

OPEN - 09.00 AM to 11.00 PM

நல்லைக்கந்தன் நெற் கபே

62, வைமன் வீதி,

நல்லூர், யாழ்ப்பாணம்.

தொ.பே. - 021 222 2779

# பாகிஸ்தானுடனான டெஸ்ட் தொடக்க வீரராக கங்கூலி



சென்னை —

பல்வேறு சர்ச்சைகளின் பின்னர் இந்திய அணியில் இடம்பிடித்துள்ள கங்கூலி பாகிஸ்தான் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் தொடக்க வீரராகக் களமிறங்குவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய கிரிக்கெட் அணி அடுத்தமாதம் பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் செய்து விளையாடவுள்ளது. இரு அணிகளிடையேயான முதல் டெஸ்ட் போட்டி லாகூரில் 13ஆம் திகதி தொடங்கும். 2ஆவது டெஸ்ட் பைசலாபாத்திலும், கடைசி மற்றும் 3ஆவது டெஸ்ட் போட்டி கராச்சியிலும் நடைபெறும்.

இதைத் தொடர்ந்து 5 ஒருநாள் போட்டி கொண்ட தொடர் நடைபெறவுள்ளது. இதன் முதல் போட்டி பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி பெஷாவரில் நடைபெறும். இந்தத் தொடர் 16ஆம் திகதி முடிவடைகிறது.

பாகிஸ்தான் தொடரில் பல்வேறு சர்ச்சைகளுக்குப் பின்பு கங்கூலி மீண்டும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். தற்போது அவர் எந்த இடத்தில் களமிறக்கப்படுவார் என்பதில் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

இலங்கைக்கு எதிரான டெஸ்டில் தொடக்க வீரராகக் களமிறங்கிய காம்பீர் சிறப்பாக ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை. அவர் 5 இனிங்ஸில் வெறும் 54 ஓட்டங்களை மட்டுமே சேர்த்தார். இதனால் அவர் பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்டில் விளையாடவுள்ள லெவனில் இடம்பிடிக்க வாய்ப்பே இல்லை. அவருக்குப் பதிலாக வாசிம் ஜபார் களமிறங்கினால், கங்கூலி விளையாடுவது சந்தேகம்தான். ஏனெனில் கங்கூலிக்கு நடுத்தர வீரராக ஆட வாய்ப்பில்லை.

அந்த இடத்தில் லக்ஷ்மன், யுவராஜ் சிங்கும் சிறப்பாக ஆடி வருகிறார்கள். அதுவம் யுவராஜ் சிங் இலங்கை டெஸ்டில் தனது பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த அந்த இடத்தைத் தக்க வைத்துள்ளார்.

மேலும் பாகிஸ்தான் டெஸ்டில் இந்தி யஅணி 2 வேகப் பந்து வீச்சாளர் மற்றும் 2 சுழற்பந்து வீச்சாளர்களுடனும், விக்கெட் காப்பாளர் டோனியுடனும் களமிறங்கும். இந்த விதத்தில் ஆடினால் 6 துடுப்பாட்ட வீரர்கள் அணியில் இடம்பெறுவர். அவர்கள் ஷேவாக், டெண்டுல்கர், ராவிட், யுவராஜ் சிங், லக்ஷ்மன் ஆகியோர் இடம் பெறுவது உறுதி. இதனால் கங்கூலி எந்த இடத்தில் களமிறங்குவாரென்பது கேள்விக் குறியாக உள்ளது.

மேலும் டெஸ்ட் போட்டிக்காக ஆடும் வெலனை தேர்வு செய்வதிலும் கடும் நெருக்கடியான சூழ்நிலை நிர்வாகத்திற்கு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் கங்கூலிதான் தொடக்க ஆட்டக்காரராக களமிறங்குவாரென கிரிக்கெட் வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக அணித் தேர்வின்போது விவாதிக்கப்பட்டதாகவும், இதன் முடிவில் தொடக்க வீரராக ஷேவாக்குடன், கங்கூலி களமிறங்குவாரென உறுதியான தகவல் வெளியாகியுள்ளது.

ஷேவாக்குடன் கங்கூலி களமிறங்கும் பட்சத்தில் அது அவருக்கு பெரும் சவாலாக அமையும்.

சுன்னாகம் நாகம்ஸ்

பிரசன்னா, மீரா ஜஸ்மின் நடித்த

கஸ்தூரிமான்

காட்சி நேரங்கள் தற்காலிகமாக மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

காட்சிகள்:- காலை 10.00 ,1.00, 4.00, 6.00 (பு.நே)

யாழ்ப்பாணம்

விஜய், ஜோதிகா, விவேக் நடித்த



திருமலை

காட்சிகள்:-10.30,2.30, 6.30 , மட்டும் (பு.நேரம்)

நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)

பிரசன்னா, லைலா, பிரகாஷ்ராஜ் மற்றும் பலர் நடித்த

கண்ட நாள் முதல்

காட்சிகள்;- 10.30, 2.00, 5.15, 8.15, (புதிய நேரம்)

நிறைஞ்சனாஸ் சங்கானை

ஷாம், சினேகா, வடிவேல் மற்றும் பலர் நடித்த

ABCD

காட்சிகள் 11.00, 2.45, 6.00 (புதிய நேரம்)

மனோகரா யாழ்ப்பாணம்

இந்தியா இலங்கை ஒரேதின வெளியீடாக

சூரியா, திரிஷா, வடிவேல், நடித்த

DIGITAL dts SOUND ஒலிநயத்துடன்



ஆறு

காட்சிகள்

10.30, 1.30, 4.30, 7.30, 10.30

மகளிருக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

சாதாரண Facial அழகுக்கலையின் அடிப்படைப் பயிற்சி, இந்து,கிறிஸ்தவ மணப்பெண் அலங்காரம் மற்றும் மடிசார் உட்பட நான்கு விதமாக சேலை அணியும் பயிலமர்வுகள்

காலம்: டிசெம்பர் 30ஆம், 31ஆம் திகதிகளில்

காலை 9.30 -பி.ப.2.30 மணிவரை

இடம்: கலாலயா பயிற்சியகம், யாழ்ப்பாணம்

(பொருமாள் கோயிலுக்கு அருகில்)

இருநாட்களுக்குமான கட்டணம் 1000/- மட்டும்

- பதிவாளர்

## 31ஆம் நாள் நினைவுதின அழைப்பிதழ்


அன்புடையீர்!

அமரத்துவமடைந்த

### சதாசிவம் சின்னத்தம்பி (அப்பண்ணா)

நினைவாக 28-12-2005 புதன்கிழமை காலை 6.00 மணியளவில் நடைபெறும் சமயக் கிரியைகளிலும், பகல் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் குடும்பசகிதம் கலந்துகொள்ளும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு : ஒவ்வொருவரும் இதனை தங்களுக்குத் தரப்பட்ட தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறோம்.



"சதாபொன்ஸ்", அல்வாய்.
T.P : 021-226 3206

C/4950

இங்ஙனம்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### சச்சிதானந்தம் சாரதாதேவி

மட்டுவில் தெற்கை பிறப்பிடமாகக் கொண்ட சச்சிதானந்தம் சாரதாதேவி அவர்கள் 25.12.2005 அன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருளம்பலம் செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், சி.சச்சிதானந்தம் அவர்களின் அன்பு மனைவியும், செல்வராசா (வெற்றிலைக்கடை, சாவகச்சேரி), செல்வரத்தினம், நவரத்தினம் (பொறியியலாளர் இ.போ.ச), சண்முகநாதன் (டென்மார்க்), தவமலர் (டென்மார்க்), காலஞ்சென்ற லோகநாதன், குகபாலன், சிவகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும்,

இளங்கோ, நிமாலினி, காலஞ்சென்ற பிரதீபன் அவர்களின் அன்புத் தாயாருமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று 26.12.2005 அன்று குச்சுப்பிட்டி இந்து மயானத்தில் நடைபெற்றது.

இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பகர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

தகவல்
செல்வராசா
(வெற்றிலை வாணிபம்)

# கோப்பாயில் கள் உற்பத்தி சார்ந்த தொழிலாளர்கள் பலர் பாதிப்பு!

யாழ்ப்பாணம் —

கோப்பாய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள சில கள் விற்பனை நிலையங்களை சுற்றுச்சூழலை காரணங்காட்டி மூடுமாறு அப்பிரதேச மக்கள் பிரதேச செயலகம் ஊடாக அழுத்தங்களைப் பிரயோகித்து வருவதால், கள் உற்பத்தி சார்ந்த தொழிலாளர்கள் பலர் தமது ஜீவனோபாய தொழிலை இழக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக கோப்பாய் பனை தென்னை அபிவிருத்திக் கூட்டுறவு சங்கத்தினர் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்தத் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் தற்காலப் பிரச்சினைகள் குறித்த கோரிக்கைகள் அடங்கிய கடிதம் ஒன்றை அரச அதிபருக்கு அனுப்பியுள்ளனர்.

சங்கத்தினர் கடந்த காலங்களில் கள் விற்பனை நிலையங்களை அமைப்பதற்காக அமைவிடத்தை தெரிவு செய்யும் போது, சுற்றுச்சூழல் குடியிருப்புகள், பாடசாலைகள் என்பவற்றைக் கருத்திற்கொண்டு மதுவரித் திணைக்களம் மற்றும் உரியவர்களிடம் அனுமதி பெற்றுத்தான் விற்பனை நிலையங்களை அமைத்ததாகவும், தற்போது விற்பனை நிலையங்களை அண்டிய பகுதியில் காணிகளைக் கொள்வனவு செய்து வீடுகள் அமைக்கப்படுவதாலும் சமூக நாகரிக மாற்றங்களினாலும் சிலர் கள் விற்பனை நிலையங்களை மூடுவதற்கு பிரதேச செயலகம் ஊடாக அழுத்தத்தைக் கொடுத்து நடவடிக்கை எடுப்பதாலும் வேறு எந்தத் தொழிலையும் மேற்கொள்ள முடியாத வறுமைக் கோட்டிற்குட்பட்டு தமது வாழ்நாள் ஜீவனோபாயத் தொழிலாக கள் உற்பத்தி சார்ந்த தொழிலை மேற்கொள்ளும் தொழிலாளர்களும் தமது சங்கமும் பாதிக்கப்படுவதாகத் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் கடந்த காலங்களில் நீர்வேலி வடக்கு, தெற்கு கிளைகள் மூடப்பட்டதால் 25 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தொழிலை இழந்துள்ளதாகவும் மேலும் சில விற்பனை நிலையங்கள் மூடுவதற்காக அழுத்தம் பிரயோகிக்கப்பட்டு வருகிறது.

வெளியூர் மது வகைகள் விற்பனை செய்யும் மதுசாலைகள் நகரின் மத்தியில் அமைந்துள்ள நிலையில் உள்ளூர் தொழிலாளர்களின் உற்பத்தி மாத்திரம் ஏன் புறக்கணிக்கப்பட வேண்டும் எனவும், இந்த நிலையைக் கருத்திற்கொண்டு வேறு காணிகளையாவது தமது விற்பனை நிலையங்களுக்கு ஒதுக்கித்தர வேண்டும் எனவும் அரச அதிபருக்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

மேலும் இந்தக் கோரிக்கைகள் யாழ். மாவட்ட நிர்வாக சேவை, பிரதேச சபை கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (90)

# வடமராட்சியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பாடசாலைகள் புனரமைக்கப்படவில்லை

ஆழியவளை —

வடமராட்சி பிரதேசத்தில் சுனாமி அனர்த்தம் காரணமாக முற்றாக சேதமடைந்த பாடசாலைகளுக்கு நிரந்தர கட்டடங்கள் அமைக்கும் பணிகள் எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை என பாடசாலை சமூகம் கவலை தெரிவித்துள்ளது.

சுனாமியால் பாதிப்படைந்த இந்தப் பாடசாலைகள் தற்போது தற்காலிக கொட்டகைகளில் எவ்வித அடிப்படை வசதிகளுமின்றி இயங்கிவருகின்றன. மாணவர்களுக்குரிய தளபாட வசதிகள் பற்றாக்குறை காரணமாக பெரும்பாலான மாணவர்கள் நிலத்தில் இருந்தே கல்வி கற்று வருகின்றனர்.

தொண்டர் நிறுவனங்கள் ஆரம்பத்தில் துரிதமாக இயங்கிய போதும் தற்போது எவ்வித முன்னேற்றகரமான செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படுவதாக இல்லை. சுனாமி ஏற்பட்டு ஒரு வருடம் பூர்த்தியடைந்துள்ள போதும் பாடசாலைகள் புனரமைக்கப்படாதது குறித்து பாடசாலை சமூகம் விசனம் தெரிவித்துள்ளது. (122)

# சண்டிலிப்பாயில் பல்வேறு திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம் —

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நவாலி கிழக்கு, சில்லாலை தெற்கு பகுதிகளில் பொது மண்டபம், குடிநீர் கிணறு, வீதி புனரமைப்பு போன்ற பணிகளுக்கு நியாப் திட்டம் II இன் கீழ் புனரமைப்பதற்கு நீர்ப்பாசனத் திணைக்களம் அனுமதி அளித்துள்ளதாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

சில்லாலை தெற்கு ஜே/149 பிரிவில் பொது மண்டபம் அமைப்பதற்கு சிவசுப்பிரமணியம் கண்மணி என்பவர் அமரத்துவம் அடைந்த சிவசுப்பிரமணியும் மோகனாம்பிகை ஞாபகார்த்தமாக காணி ஒன்றினை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இதனால் நியாப் திட்டம் II இன் கீழ் ஒன்பது லட்சத்து 10 ஆயிரம் ரூபா செலவில் பொது மண்டபம் அமைப்பதற்கான ஆரம்ப வேலைகள் நடைபெற்று வருகிறது.

# இராணுவத்தினர் காவல் பணி!

யாழ்ப்பாணம் —

பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருக்கும் இராணுவத்தினர் பஸ்தரிப்பிடங்களிலும் நிற்பதனால் பயணிகள் தமது போக்குவரத்தை சரிவர தொடர முடியாமல் உள்ளது. யாழ். குடாநாட்டில் அண்மைக்காலமாக இடம் பெற்றுவருகின்ற அசாதாரண சூழ்நிலைகளால் பெருமளவிலான இராணுவத்தினர் குவிக்கப்பட்டு ரோந்து நடவடிக்கைகளிலும் சுற்றிவளைப்புக்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்துடன், பிரதான வீதியின் இருமருங்கிலும் தொடர்ந்து காவல் கடமைகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு மருந்து

யாழ்ப்பாணம் —

ஆனைக்கோட்டை பொது சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வளர்ப்பு நாய்களுக்கு ஏ.ஆர்.வி தடுப்பு மருந்து ஏற்றப்படவுள்ளது.

எதிர்வரும் 29 ஆம் திகதி காலை 9 மணி முதல் 10 மணிவரை பிடாரி அம்மன் கோவிலடியிலும், காலை 10.30 மணிமுதல் 11.30 மணிவரை தியாகசீலம் அருகிலும், நண்பகல் 1 மணி முதல் 2 மணி வரை முன்பள்ளி ஆரம்ப சுகாதார நிலையத்திலும், 2.30 முதல் 3.30 மணிவரை நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயம் அருகிலும் வைத்து மருந்து ஏற்றப்படவுள்ளது.

அன்றையதினம் மேற்குறிப்பிட்ட பகுதிகளில் வசிப்போர் தவறாது வந்து வளர்ப்பு நாய்களுக்கு ஏ.ஆர்.வி தடுப்பு மருந்தை ஏற்றுமாறு ஆனைக்கோட்டை பொது சுகாதார பரிசோதகர் சிவகுமார் அறிவித்துள்ளார்.

# பெண்கள் மீதான சேஷ்டைகள் யாழ். குடாநாட்டில் அதிகரிப்பு!

யாழ்ப்பாணம் —

யாழ். குடாநாட்டில் நிலவும் அசாதாரண நிலையைப் பயன்படுத்தி, வீதிகளில் உலவும் சிலர் சிறுமிகள் மற்றும் இளம் பெண்கள் மீது அங்க சேஷ்டைகள் புரிவதாகக் கூறப்படுகிறது.

அண்மையில் சாதாரணதர பரீட்சை எழுதிவிட்டு திருநெல்வேலி பிள்ளையார் வீதியால் வீடு திரும்பிக்கொண்டிருந்த மாணவியைப் பின்தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் வந்த சுமார் 37 வயது மதிக்கத்தக்க நபர், மாணவியை இடைமறித்து அங்க சேஷ்டைபுரிய முற்பட்ட வேளை மாணவி கூக்குரலிட்டு, சத்தம் போட்டதையடுத்து இளைஞர்கள் சம்பவ இடத்துக்கு வந்து அந்நபரைத் துரத்திய வேளை மோட்டார் சைக்கிளில் வேகமாகச் சென்று மறைந்துள்ளார்.

இவ்வாறான சம்பவங்கள் முன்பும் இவ்விடங்களில் நடைபெற்றுவந்ததுடன், பலர் பாதிக்கப்பட்டுமுள்ளனர்.

குடாநாட்டில் ஏற்பட்டுள்ள இராணுவ அச்சுறுத்தல் காரணமாக பிரதான வீதிகளால் தமது பயணத்தை மேற்கொள்ளாமல், குறுக்கு வீதிகளால் பயணம் மேற்கொள்ளும் பெண்களுடனேயே இவ்வாறான சேஷ்டைகள் புரியப்பட்டு வருகின்றன. (63)

# பெற்றோரை இழந்த சிறுவர்களுக்கு உதவி

யாழ்ப்பாணம் —

கோப்பாய் பிரதேசத்தில் யுத்தம் மற்றும் பல்வேறுபட்ட காரணங்களால் பெற்றோரை இழந்த சிறார்களில் தெரிவுசெய்யப்பட்ட 44 சிறுவர்களுக்கு கோப்பாய் மக்கள் நலன் காக்கும் பிரிவினரின் அலுவலகத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதியன்று கற்றல் உபகரணங்கள் மற்றும் உதவுதொகை என்பன வழங்கப்படவுள்ளன.

மேலும் இந்தச் சிறுவர்களுக்கு அவர்களது முன்னேற்றம் தொடர்பாக பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் வரவழைக்கப்பட்டு கருத்தூட்டும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

மக்கள் நலன்காக்கும் பிரிவினர் கடந்த மூன்று வருடகாலமாக ஒவ்வொரு மாதமும் இந்தச் சிறுவர்களுக்கு கல்வி நடவடிக்கைகளுக்கான உதவிகளை அரசசார்பற்ற நிறுவனங்களின் அனுசரணையுடன் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (90)

# கட்டடங்கள் திறப்பு

நெல்லியடி —

மந்திகை ஆதார வைத்தியசாலையில் புனரமைக்கப்பட்ட இரண்டு கட்டடங்கள் கடந்த சனிக்கிழமை திறந்துவைக்கப்பட்டன. இந்தக் கட்டடங்களை மாகாண சுகாதாரப் பணிப்பாளர் எஸ்.குமாரவேற்பிள்ளை திறந்துவைத்தார். புனரமைக்கப்பட்ட இரு கட்டடங்களில் ஒன்று அவசர சிகிச்சைப் பிரிவு மண்டபமாகும். மற்றையது பிரசவ விடுதிக் கட்டடமாகும்.

மந்திகை ஆதார வைத்தியசாலையில் புனரமைப்பு கட்டடங்களும் நவீன வைத்திய உபகரணங்களும் இருக்கின்றபோதும் அவற்றை இயங்க வைப்பதற்கான வைத்தியர்கள், பயிற்சிபெற்ற உத்தியோகத்தர்களைப் பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (13)

# தும்பளையில் புலிகளின் அலுவலகம் படையினரால் அடித்து நொருக்கப்பட்டது

வடமராட்சி —

பருத்தித்துறை - தும்பளை பகுதியில் இயங்கி வந்த விடுதலைப் புலிகளின் அரசியற்துறை அலுவலகம் இராணுவத்தினரால் அடித்து நொருக்கப்பட்டதுடன், வீதியால் சென்றோரும் கடுமையாகத் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை மாலை தும்பளை மணல் ஒழுங்கையில் அரசியல் பணிக்கென பயன்படுத்தப்பட்ட வீட்டின் கதவுகள், ஜன்னல் கண்ணாடிகள் அடித்து நொருக்கப்பட்டதுடன், அங்கிருந்த தளபாடங்களும் சேதமாக்கப்பட்டன.

இதேவேளை, இந்த வீதியால் சென்ற மக்களை மறித்து கண்மூடித்தனமாக இராணுவம் தாக்கியுள்ளது. பொல்லுகள் கொண்டு தாக்கியதில் பலர் காயமடைந்தனர். கற்கோவளத்தைச் சேர்ந்த அருணகிரி (வயது 25) என்பவர் தலையில் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (91)

# மனிதனை மனிதன் புரிந்துகொள்ளவே ஒளி விழா நிகழ்வு நடத்தப்படுகின்றது

## கே.எஸ்.ஜோசப் அடிகளார்

சங்கானை —

இறைவன் மனிதகுலத்தைப் படைத்தபோது அவர் தனது சாயலாகவே மனிதனையும் படைத்தார். சுதந்திர மனிதனாக இந்தப் பூமியிலே வாழ்வான் என இறைவன் நினைத்திருப்பான். ஆனால் இன்றைய மனிதர்கள், மனிதரை விழுங்கப் பார்க்கிறார்கள் என, தென்னிந்திய திருச்சபையைச் சேர்ந்த அருட்திரு கே.எஸ்.ஜோசப் அடிகளார் தெரிவித்தார்.

வலி.மேற்கு பிரதேச செயலகத்தின் நலன்புரிச் சங்க மண்டபத்தில், கடந்த 20 ஆம் திகதி நடைபெற்ற ஒளி விழா நிகழ்வின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சங்கத்தின் தலைவர் ம.ஸ்ரீ முருகவேல் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், வலி. மேற்கு பிரதேச செயலாளர் சீ.ஏ.மோகன்றாஜ், தென்னிந்திய திருச்சபையைச் சேர்ந்த அருட்திரு ஏ.யூட் நிக்சன் அடிகளார் உட்பட பணிமனை உத்தியோகத்தர்களும், சிறப்பு விருந்தினராக யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய கலாநிதி சிவசங்கர் ஆகியோரும் கலந்து கொண்டனர். (48)




சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தால் மாவட்டரீதியில் பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட கவின்கலைப் போட்டியில் வெற்றிபெற்ற மகளிர் அபிவிருத்தி நிலைய இயக்குநர் சரோஜினி சிவச்சந்திரன் பரிசில் வழங்குவதையும், நிகழ்வுக்கு வருகைதந்த விருந்தினர்களையும், நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம்.

# கிணறுகளுக்கு குளோரின் இடல்

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட வலி.மேற்கு சங்கானை பகுதியில் அண்மையில் கிணறுகளுக்கு குளோரின் இடும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. சங்கானை தெற்கு, சங்கானை மேற்கு கிராமசேவை அலுவலர் பிரிவுகளில் அமைந்துள்ள கிணறுகள் அனைத்துக்கும் குளோரின இடும் பணியானது சுகாதாரத் தொண்டர்களால், சுகாதாரப் பரிசோதகர் க.சதீஸ்குமார் மேற்பார்வையில் இடம்பெற்றது.




# மூளையைப் பாதிக்கும் நோய்


அல்சீமர் என்பது மூளை நோய். இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களின் மூளை செல்கள் கொஞ்சம் கொஞ்சமாக அழிவதால் காலப் போக்கில் மூளையின் செயற்திறன் வெகுவாகக் குறைந்து விடும். இதனால் உடல் இயக்கம் படிப் படியாக சீர் கெட்டு மரணம் ஏற்படும்.



அல்சீமரால் பாதிக்கப்பட்ட பெண்களின் மூளையில் ஈஸ்ட்ரோஜன் ஹோர்மோன்கள் குறைவாக இருப்பது மரண விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. இதையடுத்து ஈஸ்ட்ரோஜன் அளவுக்கும் அல்சீமருக்கும் இடையேஉள்ளதொடர்பைக் கண்டுபிடிக்க விரிவான ஆய்வு தொடங்கியுள்ளது.

முன்னதாக மிருகங்களை வைத்து நடந்த ஆய்வுகளில் ஈஸ்ரோஜன் குறையும் போது மூளையின் குறிப்பிட்ட பகுதிகளில் வீக்கங்கள் ஏற்படுவது கண்டு பிடிக்கப்பட்டது. இந்த நிலையில் ஆண்களுடன் ஒப்பிடும் போது பெண்கள் தான் அதிகமாக அல்சீமரால் பாதிக்கப்படுகின்றனர். மேலும் பெண்மைக்கே உரிய பண்புகளுக்கு ஈஸ்ட்ரோஜன் ஹோர்மோன்கள்தான் காரணகர்த்தாவாக இருக்கின்றன. இதனால் ஈஸ்ட்ரோஜன் குறைந்தால் அல்சீமர் தலைதூக்கும் என்று கருத வாய்ப்பு உண்டானது.

# பங்கஸின் அலகு கண்டுபிடிப்பு



மரணங்களையும், ஒவ்வாமையையும் தோற்றுவிக்கும் பயங்கரமான பங்கஸ் ஒன்றின் பிறப்புரிமையியல் அலகை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இதனால் எதிர்காலத்தில் இந்த பங்கஸை அழிக்கும் மருந்துப் பொருட்களைக் கண்டறிவது இலகுவாக இருக்கும் என அவர்கள் கருதுகின்றனர்.

**Aspergillus Fumigatus** எனப்படும் இப்பங்கஸ் நிர்ப்பீடன எதிர்ப்புக் குறைந்த மனிதர்களைக் கடுமையாகத் தாக்கக்கூடியது. உறுப்பு மாற்றுச் சிகிச்சை மேற்கொண்டோர் இரத்தப்புற்று நோயுடையவர்கள், எயிட்ஸ் நோயாளிகளை இந்த பங்கஸ் அநேகமாகத் தாக்குகிறது. ஆஸ்துமா நோய்க்கும் காரணமாக இருக்கிறது. இந்தப் பங்கஸில் எட்டு குரோமோகோமில் 10 ஆயிரம் ஜீன்கள் காணப்படுகிறது. ஒவ்வாமையை தோற்றுவிக்கும் இதன் 9 இரசாயனப் பதார்த்தங்களையும் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

# நடைபயிலும் பென்குயின்கள்



பனிக்காலத்தில் தம்மை ஆரோக்கியமாகப் பேணுவதற்கான நடைப்பயிற்சியை தற்போது ஜப்பான் விலங்குக்காட்சிசாலையில் உள்ள பென்குயின்கள் ஆரம்பித்துள்ளன.

பனிக்காலத்தில் கொழுப்பு உடலில் அதிகமாக சேர்வதைத் தடுப்பதற்காக பென்குயின்கள் இயற்கையாகஇந்தநடைப்பயிற்சியை மேற்கொள்வது இயல்பு. இவ்வாறே ஹொக்கெயிடோ தீவிலுள்ள விலங்குக் காட்சிசாலையில் இப்பறவைகள் 500மீற்றருக்கு நடை பயில்கின்றன. 30 நிமிடங்களுக்கு இவைகள் நடை பயில்கின்றன.

# புற்றுநோயை தடுக்கும் தேநீர்

தேநீர் குடிப்பதன் மூலம் பெண்களுக்குக் கருப்பைப் புற்றுநோய் ஆபத்து குறையும் என்று சுவீடன் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.




தேநீர் அருந்துபவர்களுக்குப் பல்வேறு வகையான புற்றுநோய்களில் இருந்து பாதுகாப்புக் கிடைக்கும், ஞாபக சக்தியும் அதிகரிக்கும் என்று முன்னதாக ஆய்வாளர்கள் கூறியிருந்தனர். இந்தநிலையில் ஸ்டாக்ஹோமில் உள்ள கரோலின்ஸ்கா நிறுவனத்தைச் சேர்ந்த சூசன்னா லார்சன் என்பவர் தலைமையிலான குழு, தேநீர் குடிப்பதால் கிடைக்கும் நன்மைகள பற்றி விரிவாக ஆய்வு நடத்தியது.

அப்போது, தினந்தோறும் குறைந்தபட்சம் 2 கோப்பை தேநீர் குடிக்கும் பெண்களுக்கு கருப்பை புற்றுநோய் வாய்ப்பு 46 சதவீதம் குறைவது தெரியவந்தது. இதற்கு தேநீரில் இருக்கும் நோய் எதிர்ப்புப் பொருட்கள்தான் காரணம் என்று விஞ்ஞானிகள் விளக்கம் அளித்துள்ளனர்.


# கப்பல் பாதை சுத்தமாக

கடல் வழி போக்குவரத்தினால் கடல்வாழ் உயிரினங்களுக்கு ஆபத்து ஏற்படுகிறது என்ற குற்றச்சாட்டுக்களை இல்லாது செய்ய புதிய தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்ய நடவடிக் கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. வீதி மற்றும் ஆகாய வழிப் போக்குவரத்துக்களை விட கப்பல்களுக்கான எரிபொருள் செலவு ஒப்பீட்ட ளவில் குறைவு. கப்பல்களின் கந்தகம், நைதரசன் கழிவுகளால் மட்டுமன்றி அவை கடலுக்கடியில் எழுப்பும் ஒலிகளாலும் திமிங்கில இனங்கள் மிரள் வதாகக் கூறப்படுகிறது. புதிய திட்டத் தின்படி கடல்நீரை அப்படியே கப்பலினுள் உள்ளிழுத்து அதை கழுவுதல், நைதரசன் கழிவுகள் ஏற்படாதவாறு எரிபொருளைக் கையாளல் என்ற புதிய திட்டங்கள் உள்ளடங்குகிறது.






# உருவாக்கியவர் இன்றி பறக்கவுள்ள செய்மதி



சுனாமியால் பலியான 25 வயது பிரிட்டிஷ் விண்வெளி பொறியியலாளர் ரொம் ஃபெயர் பெய்ரன் என்பவரது முயற்சியால் உருவான **Giove - A** என்ற செய்மதி இந்த வாரம் விண்வெளிக்கு ஏவப் படுகிறது. இது கலிலியோ விண்கலத்தின் தொடர்



பாடலுக்கான முன்னோடி பறப்பு முயற்சியாகும். ரஷ்யாவின் பைகனூர் விண்தளத்திலிருந்து எதிர்வரும் 28 ஆம் திகதி இது ஏவப்படுகிறது. சிவில் தேவைகளுக்காக அனுப்பப்படும் இந்த செய்மதியை ஐரோப்பிய விண்வெளி ஆய்வுக் கழகம் உருவாக்கியது. இங்கிலாந்தில் சிறிய செய்மதிகளை உருவாக்கி பிரபலமான சர்ரே செய்மதித் தொழில்நுட்ப நிறுவனத்தால் இந்த செய்மதியும் உருவாக்கப்பட்டது. இதன் உருவத்தோற்றத்தை வடிவமைத்த ரொம் கடந்த ஆண்டு தாய்லாந்தில் தமது பெற்றோருடன் விடுமுறையைக் கழித்துக் கொண்டிருந்தவேளையே சுனாமிக்குப் பலியானார்.

# இரட்டைக் குழந்தைகள்

முதுகெலும்பு ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகளை வெற்றிகரமாகப் பிரித்து சாதனை படைத்துள்ளனர் பிரான்ஸ் மருத்துவர்கள்.



மார்சில்லி நகரைச் சேர்ந்த ஒரு தம்பதியருக்கு இரட்டை ஆண் குழந்தைகள் பிறந்தன. குறைப் பிரசவத்தில் (26 வாரத்தில்) பிறந்த இந்தக் குழந்தைகள் முதுகெலும்பு அடிப்பகுதி ஒட்டிய நிலையில் இருந்தனர். இதையடுத்து லா டிமோன் மருத்துவமனையைச் சேர்ந்த மருத்துவ நிபுணர்கள் குழந்தைகளைப் பிரிக்க முடிவு செய்தனர். ஆனால், உடனடியாகப் பிரிப்பது சாத்தியமில்லை என்பதால், குழந்தைகள் தீவிர சிகிச்சைப் பிரிவில் வைக்கப்பட்டுக் கண்காணிக்கப்பட்டனர்.

இந்தநிலையில் 15 மாதங்கள் முடிந்ததும், இரட்டைக் குழந்தைகள் இருவரும் அறுவைச் சிகிச்சை மூலம் வெற்றிகரமாகப் பிரிக்கப்பட்டனர். பிரான்ஸ் வரலாற்றில் முதுகெலும்பு ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகளைப் பிரிப்பது இதுவே முதன் முறையாகும்.

குழந்தைகளைப் பிரிக்கும்போது, பக்கவாதம் தாக்கி உடம்பின் கீழ்ப்பகுதி செயலற்றுப் போகும் வாய்ப்பும், மெனின் சிட்டிஸ் என்ற மூளை நோயும் தாக்கும் வாய்ப்பும் இருந்தது. ஆனால், மருத்துவர்கள் கண்ணும் கருத்துமாக இருந்ததால், எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு கண்விழித்த குழந்தைகள் இரண்டுபேரும் கை - கால்களை உற்சாகமாக உதைத்துக்கொண்டு இருந்தனர். தற்போது அறுவைச் சிகிச்சையால் ஏற்பட்ட காயங்களைக் குணப்படுத்துவதற்கான சிகிச்சைகளை மருத்துவர்கள் தொடங்கியுள்ளனர்.

# திமிங்கில வேட்டைக்கு அனுமதி



அடுத்த ஆண்டில் 1052 மிங் திமிங்கில இனங்களை வேட்டையாட நோர்வே அரசு வேட்டையாளர்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது. இது இந்த ஆண்டைவிட 30 சதவீதம் அதிகமாகும். நோர்வே பாராளுமன்றத்தில் பெரும்பாண்மை வாக்குகளால் இந்த அனுமதிச் சட்டமூலம் நிறைவேறியுள்ளது. உலக அளவில் திமிங்கில வேட்டைக்குத் தடையும், எதிர்ப்பும் இருந்தபோதிலும் நோர்வே 1993 முதல் திமிங்கிலங்களை வேட்டையாடி வருகிறது. வட அத்திலாந்திக்கில் காணப்படும் மிங் திமிங்கில இனங்கள் அளவுக்கதிகமாகப் பெருகுவதாகவும், இவை அழிந்துவரும் உயிரினப்பட்டியலில் இல்லை எனவும், ஒஸ்லோ வாதிடுகிறது. 30 அடி நீளம் வளரக் கூடியது இந்த மிங் திமிங்கில இனங்கள்.

# கர்ப்பிணிகளுக்கு ஓய்வு மிக முக்கியம்...



கர்ப்பம் தரித்த நாள் முதல் கொஞ்சம் அக்கறை செலுத்தினால் பிரசவத்திற்குப் பிறகும் அழகான தோற்றத்தைத் தக்க வைக்கலாம். அதற்கு சில ஆலோசனைகள்...

கர்ப்ப காலத்தில் உடற்பயிற்சி செய்யலாம். ஆனால் மருத்துவரின் ஆலோசனையைக் கேட்ட பிறகே செய்ய வேண்டும். ஏனெனில் உடலில் வேறு ஏதேனும் பிரச்சினைகள் இருக்கும் போது உடற்பயிற்சிகளைச் செய்தால், பிரச்சினை பெரிதாக வாய்ப்புண்டு. வீட்டு வேலைகளான பெருக்கித் துடைப்பது, துணி துவைப்பது போன்றவையே அருமையான உடற்பயிற்சிகள் தான். முதல் மூன்று மாதங்களுக்குப் பிறகு தினமும் 5 கி.மீ தூரம் நடக்கலாம்.

கர்ப்ப காலத்தில் இருவருக்கும் சேர்த்து உண்ண வேண்டும் என்று சொல்லிச் சொல்லியே கர்ப்பிணிப் பெண்ணுக்கு ஏகப்பட்ட உணவை வைத்துத் திணிப்பார்கள். இது தவறு. கர்ப்பமாக இருக்கிற பெண் போஷாக்கான ஆகாரத்தை சாப்பிட்டாலே போதும். புதிய காய்கறிகள், பழங்கள் போன்றவற்றை அதிகம் சேர்த்துக் கொள்ளவேண்டும். தேவைக்கதிகமாகச் சாப்பிடுவது பிரசவத்திற்குப் பிறகு உடல் எடை அதிகரிக்க வழிவகுத்து விடும்.

ஓய்வு போதியளவு ஓய்வு என்பது கர்ப்பிணிகளுக்கு மிக மிக முக்கியம். இரவில் எட்டு மணி நேரமும், பகலில் குறைந்தது ஒரு மணிநேரமும் தூக்கம் அவசியம்.

# எதிர்ப்பு மருந்துக்கும் எதிர்ப்பு




பறவைக் காய்ச்சலை மனிதரிடையே தோற்றுவிக்கும் வைரஸ் தற்போது இதன் எதிர்ப்பு மருந்துக்கு எதிர்ப்புக் காட்டுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. வியட்நாமில் இந்த நோயால் பாதிக்கப்பட்ட இருவருக்கு எதிர் ப்பு மருந்து கொடுக் கப்பட்டும் அவர்கள் நோய் அதிகமாகி மரணமாகியுள்ளனர். $H_5N_1$ எனும் இந்த வைரஸினால் தென் கிழக்காசியாவில் இது வரை 70 பேர் பலியாகியுள்ளனர்.

இது வைரஸ் எதிர்ப்பு மருந்துகளுக்கும், எதிர்ப்புக் காட்டுவதையே புலப்படுத்துவதாக நிபுணர்கள் கருதுகின்றனர்.

# புதிய தொழில் நுட்பம்



யூபிசொப்ட் எனும் நிறுவனம் கையடக்க தொலைக்காட்சி விளையாட்டுக்களை அறிமுகப்படுத்துயுள்ளது. பிரெஞ்ச் நிறுவனமான யூபி ஏனைய பெரிய தொழில்நுட்ப நிறுவனங்களுடன் போட்டியிட்டு இத்தகைய விளையாட்டுகளை உருவாக்கியுள்ளது. 2009 இல் இத்தகைய விளையாட்டுக்களைக் கொண்ட தொலைபேசிகளை 220 மில்லியன் மக்களுக்குக் கிடைக்கச் செய்யமுடியும் என இதன் தலைவர் குலிமொட் கூறுகின்றார்.

# வெள்ளி கலந்த உணவுப் பொருட்கள் புற்றுநோயை உருவாக்கும்...

இந்திய உணவுப் பண்டங்களின் அழகுக்காகச் சேர்க்கப்படும் வெள்ளியுடன் கலந்த கலப்படப்பொருட்கள், புற்றுநோய் வரை பாதிப்புகளை ஏற்படுத்தும் என்று ஆய்வுகள் எச்சரிக்கின்றன. லக்னோவில் உள்ள தொழிற்சாலை நச்சுப்பொருட்கள் ஆய்வு மையம் நடத்திய ஆய்வில் இது தெரிய வந்துள்ளது. லாலாக் கடை உணவுகளில் கவர்ச்சிக்காக வெள்ளியை மிகமிக மெல்லிய தகடுகளாக்கி மேல் புறத்தில் சேர்ப்பார்கள். தூய்மையான வெள்ளி உடல் நலத்திற்கு எந்தக் கேடும் விளைவிப்பதில்லை.



இந்திய கலப்படத் தடைச்சட்டம், 99.9% தூய்மையான வெள்ளியே, உணவுப்பொருட்களில் பயன்படுத்த வேண்டும் என்று அறிவுறுத்துகிறது. ஆனால், லக்னோ ஆய்வு மையம் நடத்திய ஆய்வில், பாதிக்கும் மேற்பட்ட பலகார வகைகள் இந்த அளவில் தூய்மையான வெள்ளியைப் பயன்படுத்தவில்லை என்பது தெரியவந்துள்ளது.

காரீயம், குரோமியம், காட்மியம், போன்றவற்றின் துகள்கள் வெள்ளி யுடன் சேர்ந்து காணப்பட்டதாக இந்த ஆய்வினை நடத்திய டாக்டர் முகுல் தாஸ் தெரிவித்துள்ளார். இந்தத் தாதுக்களை உட்கொள்வதால், புற்று நோயை ஏற்படுத்தக்கூடிய கார்சினோஜெகள் உடலில் புக வாய்ப்பு ஏற்படுகிறது. இவ்வாறான கனமான தாதுக்களைக் கலப்படம் செய்வதால் வெள்ளிக் கலவை பூசப்பட்ட பண்டங்களை வாங்கும் போது கவனமாக இருக்க வேண்டும் என்று இந்த ஆய்வு எச்சரிக்கிறது. இந்தியாவில் உணவுப் பண்டங்களில் அழகுக்காகச் சேர்க்கப்படுவதற்காக ஆண்டு தோறும், 2 லட்சத்து 75 ஆயிரம் கிலோ வெள்ளி பயன்படுத்தப்படுகிறது.

# எலும்புகளைப் பாதுகாக்கும் சத்து

மக்னீசியம் சத்து நிறைந்த உணவுப் பொருட்களைச் சாப்பிட்டால் எலும்புகளின் அடர்த்தி அதிகரிக்கும்.



நியூயோர்க்கைச் சேர்ந்த ஆய்வாளர்கள் கறுப்பு மற்றும் வெள்ளை இனத்தைச் சேர்ந்த 2000 பேரை தேர்வு செய்து அவர்களிடம் ஒரு வினாத்தாளைக் கொடுத்து பதில் அளிக்குமாறு கேட்டுக் கொண்டனர். மக்னீசியம் சத்துக்காக எந்தெந்த உணவுப்பொருட் களைச் சாப்பிடுகிறீர்கள், என்ன மாதிரியான சத்து மாத்திரைகளை எடுத்துக் கொள்கிறீர்கள் என்பது போன்ற பல கேள்விகள் அதில் இடம் பெற்றிருந்தன.

மேலும் கூடுதலாக பல்வேறு சோதனைகளை நடத்தி எலும்பு அடர்தியை குறித்துக் கொண்டனர். இதன் பின்னர் 2000 பேரும் தந்த பதில்களை கவனமாகப் பரிசீலித்த போது மக்னீசியம் சத்து நிறைந்த உணவுகளை நிறைய சாப்பிட்டவர்களுக்கு எலும்பு அடர்த்தி அதிகமாக இருப்பது தெரிய வந்தது. தினந்தோறும் 100 மில்லிக்கிராம் மக்னீசியம் சத்து உட்கொண்டால் எலும்புகளின் அடர்த்தி 1 சதவீதம் அதிகரிக்கும். எனினும், ஆண்களுக்குத் தினந்தோறும் 420 மில்லிக்கிராமும், பெண்களுக்குத் தினந்தோறும் 320 மில்லிக்கிராமும் மக்னீசியசத்து வேண்டும் என்று மருத்துவர்கள் பரிந்துரைத்துள்ளனர் .

மக்னீசியச்சத்து பூண்டு, காலி பிளவர், பசளிக்கீரை, பீட்ரூட், சர்க்கரைக் கிழங்கு, வாழைப்பழம், அத்திப்பழம், ஆலிவ், முந்திரி, வாதாங் கொட்டை, வேர்கடலை ஆகியவற்றில் தாராளமாக உள்ளது.

# இடைத்தங்கல் முகாம்களிலுள்ளோர்க்கு

# நிரந்தர வீடுகள் அமைக்கப்படவில்லை

## பாதிக்கப்பட்டோர் விசனம்

வடமராட்சி —

மருதங்கேணிப் பிரதேசத்தில்இடைத்தங்கல் முகாம்களில் வாழும் மக்களுக்கு இன்னும் நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவில்லை எனப் பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

சுனாமி அனர்த்தம் நடைபெற்று ஒருவருடம் முடித்துவிட்டது. ஆனால் மக்களுக்குரிய அடிப்படைவசதிகள் இன்னமும் செய்து கொடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் நிரந்தர வீடுகள் அமைக்கப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டு வருவதாகவும் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியிலேயே அசமந்தப் போக்குக் காணப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இடைத்தங்கல் முகாம்களில் உள்ள மக்கள் அண்மைய வெள்ளம் காரணமாக பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கி வருவதுடன், மிக நெருக்கமாக முகம் கொடுக்க வேண்டிய அவல நிலைக்கும் உள்ளாகி வருகின்றனர்.

இந்தப் பிரதேசத்தில் சில கிராமங்களில் நிரந்தர வீடுகள் அமைப்பதற்குரிய எந்தவித ஆரம்ப நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என முகாம் மக்கள் ஆதங்கம் தெரிவித்துள்ளனர். (15)

# மருதங்கேணி கோட்ட ஆசிரியர்களுக்கு விடுதிகள் அமைப்பதற்காக நிதி ஒதுக்கீடு

ஆழியவளை —

மருதங்கேணிக் கல்விக் கோட்டத்தில் ஆசிரியர்கள் தங்குவதற்கு விடுதிகள் அமைப்பதற்கு சிறுவர் பாதுகாப்பு நிதியம் (SCF) நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்தக் கல்விக் கோட்டத்தில் உள்ள செம்பியன்பற்று அ.த.க.பாடசாலை, மருதங்கேணி இ.த.க வித்தியாலயம், ஆழியவளை சி.சி.த.க வித்தியாலயம், செம்பியன்பற்று றோ.க.த.க.பாடசாலை, வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம் என்பவற்றுக்கு அரை நிரந்தர ஆசிரியர் விடுதிகள் அமைப்பதற்கு தலா இரண்டு இலட்சத்து நாற்பதாயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது. விடுதிகள் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பிரதேசத்திலுள்ள பாடசாலைகளுக்கு தொண்ணூறு சதவீதமான ஆசிரியர்கள் வடமராட்சிப் பகுதியில் இருந்து வந்து, பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் தங்குமிட வசதியின்றி கல்வி கற்பித்து வருகின்றனர். இந்த நிலைமையினை பாடசாலைச் சமூகம் சுட்டிக் காட்டியதை அடுத்தே சிறுவர் பாதுகாப்பு நிதியம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. (122)

# வடமராட்சியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பாடசாலைகள் புனரமைக்கப்படவில்லை

ஆழியவளை —

வடமராட்சிப் பிரதேசத்தில் சுனாமி அனர்த்தம் காரணமாக முற்றாக சேதமடைந்த பாடசாலைகளுக்கு நிரந்தரக் கட்டடங்கள் அமைக்கும் பணிகள் எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை என பாடசாலைச் சமூகம் கவலை கொண்டுள்ளது.

அனர்த்தம் காரணமாக பாதிப்படைந்த இப்பாடசாலைகள், தற்போது தற்காலிக கொட்டகைகளில் எந்தவித அடிப்படை வசதிகளுமின்றி இயங்கி வருகின்றன.

மாணவர்களுக்குரிய தளபாட வசதிகள் பற்றாக்குறை காரணமாக பெரும்பாலான மாணவர்கள் நிலத்தில் இருந்தே கல்வி கற்று வருகின்றார்கள்.

தொண்டர் நிறுவனங்கள் ஆரம்பத்தில் துரிதமாக இயங்கியபோதும் தற்போது எந்தவித முன்னேற்றகரமான செயற்பாடுகளும் நடைபெறவில்லை. அனர்த்தம் ஏற்பட்டு ஒரு வருடம் பூர்த்தியடைந்துள்ள போதும், பாடசாலைகள் புனர மைக்கப்படாதது குறித்து பாடசாலைச் சமூகம் விசனம் அடைந்துள்ளது. (122)

# நேர்முகப்பரீட்சை

வடமராட்சி —

மருதங்கேணிக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தினால் நடைமுறைப்படுத்தவுள்ள பாடசாலைகள், சமூக உளவியல் மற்றும் சுகாதார நலத்திட்டத்தில் சேவையாற்றவுள்ள தொண்டர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்காணலும், எழுத்துப் பரீட்சையும் ஜனவரி மாதம் 7 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ்.கிளை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் சேவை செய்வதற்கு 22 தொண்டர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

எனவே தகுதியான தொண்டர்களை அழைத்து வருவதற்குரிய ஒழுங்குகளைச் செய்யுமாறு பிரிவுத் தலைவரை யாழ்.கிளை கேட்டுள்ளது.

# நெஞ்சில் வாழும் பூக்கள் இறுவெட்டு வெளியீட்டு விழா




கிளிநொச்சி —

ஆழிப்பேரலையில் முதலாம் ஆண்டு நினைவலையில் நாட்டுப் பற்றாளர் திருமதி ஜோர்ச் பிலோமினாம்மாவும் மற்றும் ஏனைய அனைத்து உறவுகள் நினைவாகவும், "நெஞ்சில்வாழும் பூக்கள்" இறுவெட்டு வெளியீட்டு நிகழ்வு நேற்று முன்தினம் காந்தரூபன் அறிவுச்சோலையில் இடம்பெற்றது.

அறிவுச்சோலைப் பொறுப்பாளர் புவியரசன் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில், தமிழீழத் தேசியக்கொடியை கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை ஏற்றிவைத்தார். தொடர்ந்து கடற்புலிகளின் சிறப்புத்தளபதி நினைவுரையினையும் ஆற்றினார். இறுவெட்டினை அதற்கு இசை வழங்கிய பிரியதீபன் வெளியிட்டு வைக்க, கேணல் சூசை அவர்கள் பெற்றுக்கொண்டார். இறுவெட்டிற்கான மதிப்புரையைப் புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழன்பன் நிகழ்த்தினார்.

நிகழ்வில் சிறப்புரையை க.வே.பாலகுமாரன் நிகழ்த்தினார்.




நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பழையமாணவர் சங்கத்தின் சுவிஸ் கிளையினரால் சுமார் 400,000 ரூபாய் பெறுமதியான கணினித் தொகுதிகள் கல்லூரிக்குக் கையளிக்கப்பட்டுள்ளது. கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வில் இந்தக் கையளிப்பு இடம் பெற்றது. இந்த நிகழ்வை முல்லைத்தீவு வலயக் கல்விப்பணிப்பாளர் அரியரத்தினம் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

# காலச் சுவட்டில்...

## இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

## டிசம்பர் – 27

1892 : இந்தியாவின் கன்னியாகுமரியில் கடலில் குன்றின் மேல் 25 ஆம் திகதி முதல் தனிமைத் தியானத்தில் ஈடுபட்டிருந்த சுவாமி விவேகானந்தர் தனது தியானத்தை முடித்துக் கொண்டார்.

1914 : குறைந்த செலவில் அலுமினியம் தயாரிக்கும் முறைகளைக் கண்டறிந்து தந்த சார்ல்ஸ் மார்ட்டின் ஹால், ப்ளோரிடாவில் காலமானார்.

1917 : ரஷ்யாவிடமிருந்து லாட்வியா சுதந்திரம் அடைந்து விட்டதாக ரிகா கவுன்சில் அறிவித்தது. அத்துடன் தங்களுக்குப் பாதுகாப்பு வழங்குமாறு ஜேர்மனியிடம் கோரிக்கை விடுத்தது.

1917 : ரஷ்யாவில் வங்கிகள் நாட்டுடமையாக்கப்பட்டன. நாட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் தங்கத்தைத் தேடிக் கண்டு பிடிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது.

1932 : தனது நாட்டில் ஏற்பட்ட கடும் பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க தென் ஆபிரிக்கா தங்க நாணயத்திட்டத்தைக் கைவிட்டது.

1934 : "பெர்சியா" தனது பெயரை ஈரான் என மாற்றிக்கொண்டது.

1939 : துருக்கியில் எரிசிங்கன், சிவாஸ், சாம்சுன் முதலான இடங்களில் ஏழுமுறை நிலநடுக்கம் ஏற்பட்டது. 50,000 இற்கும் அதிக மானவர்கள் உயிரிழந்தனர்.

1945 : உலக வங்கி "சர்வதேச புனரமைப்புக்கும் வளர்ச்சிக்குமான வங்கி" என்ற பெயருடன் வாஷிங்டனில் கூடிய 24 நாடுகளது பிரதிநிதிகளினால் நிறுவப்பட்டது. இதே நாளிலேயே சர்வதேச நிதி நிறுவனமும் (I.M.F) நிறுவப்பட்டது.

1945 : "வயோஜர் - 2" என்ற கப்பல் நான்கு ஊழியர்களோடு பெர்முடா முக்கோணத்தில் மறைந்து போனது.

1949 : இந்தோனேஷியா, சுதந்திரக் குடியரசு நாடானதாக அறிவிக்கப்பட்டது. அகமது சுகார்னோ முதலாவது ஜனாதிபதியானார்.

1950 : அமெரிக்காவுக்கும் ஸ்பெயினுக்கும் இடையே ராஜ்ய உறவு மீண் டும் மலர்ந்தது.

1951 : கொரியப் போர் நிறுத்தம் முறிவடைந்தது.

1958 : கியூபாவில் ஸான்டா கிளாரா நகரில் பிடல் காஸ்ட்ரோவின் படைக்கும், அரச படைக்கும் இடையே கடும் சண்டை நடந்தது. அரச படை தோல்வியடைந்தது. அரச படையின் பல அதிகாரிகள் காஸ்ட்ரோவின் படையுடன் இணைந்து கொண்டனர்.

1975 : இந்தியாவில் மிக மோசமான நிலக்கரிச் சுரங்க விபத்து ஏற்பட்டது. தன்பாத் அருகேயுள்ள காஸ்னாலா நிலக்கரிச் சுரங்கத்தில் திடீரென வெள்ளம் புகுந்ததால், அரணது பாதுகாப்புச் சுவர் இடிந்து விழுந்தது. இது காரணமாகச் சுரங்கம் தகர்ந்து விழ உள்ளேயிருந்த 372 சுரங்கத் தொழிலாளர்கள் புதையுண்டு இறந்தனர்.

1978 : நாற்பது ஆண்டு கால சர்வாதிகார ஆட்சிக்குப்பின், ஸ்பெயினில் ஜனநாயகம் மலர்ந்தது.

1979 : ஆப்கானிஸ்தானில் நடந்த புரட்சியில் ஜனாதிபதி ஹபிபுல்லா ஆஸின் பதவியிலிருந்து விரட்டப்பட்டார்.

1992 : 26 வருடங்களுக்குப் பிறகு கென்யாவில் போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது.

1993 : ஜெனிவாவில் "உலக வர்த்தக அமைப்பு" (WORLD TRADE ORGANISATION) நிறுவப்பட்டது.

தொகுப்பு :- சந்துரு

# வடமராட்சி கிழக்கு பாடசாலைகளில் சமூக உளவியல் செயற்திட்டம்

ஆழியவளை —

எதிர்வரும் ஜனவரி முதல் வடமராட்சி கிழக்கு கல்விக் கோட்டப் பாடசாலைகளில், சமூக, உளவியல் மற்றும் சுகாதாரம் என்ற திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

இதற்கென இந்தப் பிரதேசத்தில் ஐந்து பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. டென்மார்க் செஞ்சிலுவைச் சங்கத்தின் நிதி உதவியுடன், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் இந்தத் திட்டத்தினைச் செயற்படுத்தவுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் போரினால் மிகவும் பாதிப்புக்கு உள்ளாகி வறுமை நிலையிலுள்ள மாணவர்களைக் கொண்ட மருதங்கேணி இந்து வித்தியாலயம், உடுத்துறை மகாவித்தியாலயம், ஆழியவளை சி.சி.த.க வித்தியாலயம், வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம், கேவில் அ.த.க. பாடசாலை என்பவை முதற்கட்டமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தினைச் செயற்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட பாடசாலைகளில் இருந்து 22 ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (122)

நமது ஈழநாடு

**வைர வரிகள்**

ஒலித்தக்கால் என்ஆம் உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும்.

-திருக்குறள்

## நமது நோக்கு

# அரச ஊழியரின் பணிப் புறக்கணிப்பு நியாயமானதொரு போராட்டமே!

தொடரும் படைத்தரப்பினரின் பொதுமக்கள் மீதான அராஜக நடவடிக்கைகளைக் கண்டித்தும், இதற்கு ஒரு இறுதியும், உறுதியுமான முடிவொன்றைக் காணும் நோக்கிலும் - நேற்று முதல் அரச ஊழியர்கள் தொடர்ச்சியான பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

மேற்படி பணிப் புறக்கணிப்புப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ள தமிழ்த் தேசிய தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பினர், தொடரும் சிங்களப் படைகளின் அராஜகங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து, தமிழ் பேசும் மக்களின் இயல்பு வாழ்க்கையையும், கௌரவத்தையும் வென்றெடுக்கவும், எமது பாதுகாப்பை உறுதிசெய்யும் வரை இயல்பு வாழ்வுக்கு உத்தரவாதம் வழங்கும்வரை இப்பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தைத் தொடர்ந்து மேற்கொள்ளப்போவதாகத் தெரிவித்துள்ளார்கள்.

உடனடி - அத்தியாவசிய - மனிதாபிமானப் பணிகளைத் தவிர, அனைத்து அரச பணிகளையும் புறக்கணிக்க வேண்டும் என அவர்கள் விடுத்துள்ள அழைப்பானது மாற்று வழி ஏதுமற்ற நிலையில் எடுத்துள்ள முடிவென்றே கூறவேண்டும்.

அரச பணியாளர்களின் இந்தத் தீர்மானம் அரசாங்கத்தின் நன்கு திட்டமிட்ட தமிழின விரோத நடவடிக்கைகளின் கொடூரம் தாங்காமல், சிறுமை கண்டு பொங்கும் நிலைக்கு தமிழ் பேசும் மக்கள் சென்று கொண்டிருப்பதையே உணர்த்துவதாகவும் உள்ளது.

கடந்த மூன்று வாரங்களாக யாழ். குடாநாட்டில் ஆயுதப் படையினர் மேற்கொண்டுவரும் கண்மூடித்தனமானதும், மேலாதிக்க வெறிகொண்டதுமான தமிழ் மக்களுக்கெதிரான தாக்குதல்கள் நாளுக்கு நாள் வேகம் கொண்டுவரும் நிலையில், குடாநாட்டின் இயல்பு இயக்கமானது முற்றாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளதுடன், அப்பாவிப் பொது மக்கள் மத்தியில் அச்சமும், பீதியும் நிரந்தரமாகக் குடிகொள்ள ஆரம்பித்துள்ளது.

இந்த நிலையில் மக்களின் அன்றாட நடமாட்டமானது வெகுவாகக் குறைந்து, வீடுகளில் ஒதுங்கிப் பாதுகாப்பைத் தேடும் அவலம் ஏற்பட்டுள்ளது. தமது சொந்த வாழ்வியல் தேவைகளுக்காகவோ, தொழில் முயற்சிகளுக்காகவோ, கடமைகளின் நிமித்தமோ, வீதிகளில் இறங்கிப் பயணித்தல் என்பது அவர்களின் உயிருக்கும் - உடல் பாதுகாப்புக்கும் உத்தரவாதமற்ற நிலையையே அரச - ஆயுத பயங்கரவாதம் இன்று வடக்கு - கிழக்கு தமிழர் பிரதேசங்களில் ஏற்படுத்தியுள்ளது.

சுற்றிவளைப்பு, தேடுதல், சோதனை, கைது என்ற வகையிலான ஆயுதப் படையினரின் நடவடிக்கைகள் யாவும் உளவியல் ரீதியிலும், உடலியல் ரீதியிலும், பால், வயது வேறுபாடின்றி சகல மக்களையும் மிக மோசமான முறையில் பாதிக்கத் தொடங்கியுள்ளமை - ஒரு திட்டமிட்ட செயற்பாட்டின் அனுகுமுறையாக உள்ளதாகவே தென்படுகின்றது.

சந்திக்குச் சந்தியல்லாது, தெரு நெடுக சந்தேகப் பார்வையுடனும், இனம்புரியாத கோப உணர்வுடனும் படைத்தரப்பினரின் தோற்றமும், செயற்பாடுகளும் ஒரு அந்நிய ஆக்கிரமிப்புப் படையினரின் நடவடிக்கைகளை ஒத்திருப்பதாகவே மக்களால் உணரப்படுகின்றது.

சொந்த மண்ணில், சொந்த வீட்டில், சுதந்திரமாக வாழும் உரிமைகள் தமிழ் மக்களிடமிருந்து பறிக்கப்பட்டு விட்டதாகவே தெரிகிறது. அது மட்டுமல்ல இங்குள்ள மாணவர்கள் தமது கல்வியை அச்சமின்றித் தொடரவோ, உயர் கல்விப்பீடங்கள் இயல்பாக இயங்கவோ, ஏன் அரச அலுவலகங்களின் பணியாளர்கள், உயர் அரச அதிகாரிகள் கூடத் தங்கள் கடமைகளுக்கு சாதாரணமாகச் சென்றுவரவோ குடாநாட்டின் இராணுவச் சூழல் அனுமதிப்பதாக இல்லை.

எந்த இடத்தில், எந்தச் சந்தியில், என்ன காரணத்துக்காக படையினர் மக்கள் மீது தாக்குதலை மேற்கொள்கின்றார்கள் என்பதைத் தீர்மானிக்க முடியாத நிலையில், எவர்தான் அச்சமின்றித் தமது வாழ்வியல் கடமைகள் நிமித்தம் தெருவில் நடமாட முடியும்?


இந்த மக்களுக்கான பாதுகாப்புக்கு, அதுவும் உயிர்ப் பாதுகாப்புக்கு அரச படையே அச்சுறுத்தலாக இருக்கும்போது வேறு எவரால் பாதுகாப்பை வழங்க முடியுமாம்?

இந்த நிலையில் அரச ஊழியர்கள் எடுத்துள்ள பணிப் புறக்கணிப்புத் தீர்மானம் சரியான ஒன்றாகவே உள்ளது.

- இதுவும் தவிர்க்கவே முடியாத ஒரு அமைதி வழிப் போராட்டம் தான். எனினும், இவற்றையெல்லாம் புரிந்து கொண்டு இன்றைய அரசு செயற்படுமா என்பது சந்தேகமே...!

*267, Navalar Road,*
*Jaffna.*
*T.P. - 021-2225107*
*www.eezhanaadu.com*

## நாடும் நடப்பும்




# கடத்தல்களும் - பின்னணிகளும் அவை எழுப்பும் சந்தேகங்களும்

வவுனியாவில் இரு கடத்தல் சம்பவங்களுக்குப் பின்னர் படையினரின் நடவடிக்கைகள் மக்களை அச்சப்படுத்துவதாகவுள்ளது.

கடத்தல் சம்பவங்கள் பற்றி படைத்தரப்பினர் விடுதலைப் புலிகள் மீதே குற்றம் சுமத்தினர். இது பற்றி சில, பல விடயங்களை ஆராய்வோம்.

மன்னார்க் கடலில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டபோது சயனைட் உட்கொண்ட பெண்ணை வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதித்து, அவரை கண்காணிக்க நான்கு பொலிஸாரையும் பாதுகாப்புக்கு அமர்த்தியிருந்தனர்.

சம்பவம் நடைபெற்ற அன்று மூவர் உணவருந்தச் சென்றிருந்த வேளை, கடமையில் ஒருவர் மட்டுமே இருந்துள்ளார். அவரைச் சுட்டுக் கொலை செய்து, பெண்ணையும் கடத்திச் சென்ற பின்னர், தகவல் மேலதிகாரிகளுக்குத் தெரிந்து அவர்கள் அடுத்த கட்ட நடவடிக்கையினைத் தொடங்க அரைமணி நேரமாகி விட்டது என வைத்தியசாலையில் நின்ற பலரும்கூறினார்கள். இந்தச் சம்பவம் திரைப் படங்களில் நடப்பவை போன்றே மிக வேகமாக நடந்து முடிந்தது.

ஆனால், தேடுதல் நடத்த வந்த படையினர் தாமதமாக வந்து, அவர்களின் இயலாமையினை மக்கள் மீது காட்டினார்கள். வீதியால் சென்ற இளைஞர்களைத் தாக்கிக் காயப்படுத்தினார்கள். விசேட அதிரடிப்படையினரையே கூடுதலாகச் சோதனை நடவடிக்கையில் ஈடுபடுத்தி, மக்களை அச்சமடையச் செய்து, பதற்றத்தை ஏற்படுத்தி ஆற்றாமையினைத் தீர்த்துக் கொண்டனர்.

கடத்தல்காரர்கள் யார் என்பதைக் கண்டுபிடிக்க முடியாதவர்களாகவுள்ளனர் என்பதை தாமே எவ்வாறு ஒத்துக்கொள்வது? ஆகவே.. சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்த பெண்- புலிதானென்றும், அவரைப் புலிகளே கடத்தினார்களென்றும் அறிக்கை விடுவதுடன் அவர்களின் வேலை முடிந்து விட்டது.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற அடுத்த நாள் வவுனியாவில் இன்னுமொரு கடத்தல் சம்பவமும் நடைபெற்றது. புளொட் இயக்கத்தின் ஆரம்பகால உறுப்பினரான சின்னத்தம்பி கணேசலிங்கம் (பாரூக், வயது 47). ஒரு காலத்தில் புளொட் இயக்கத்தின் கோட்டையாக இருந்த வவுனியாவின் தென்கிழக்கு, கிழக்குப் பக்கமுள்ள கிராமங்களும், காடுகளும் இன்று நிலைமை மாறியிருந்த போதும், இந்தப் பகுதிக்குள்ளிருக்கும் சமளங்குளம் என்ற கிராமத்தில் வைத்தே மோட்டார் சைக்கிளில் இன்னொருவருடன் சென்று கொண்டிருக்கும் போது பாரூக் கடத்தப் பட்டுள்ளார்.

இவரைக் கடத்தப் பயன்படுத்தப்பட்ட வானையும், டிப்பறையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளதாகவும், இதனுடன் தொடர்புடைய நான்கு பேரை சந்தேகத்தில் கைது செய்துள்ளதாகவும் வவுனியா பொலிஸார் கூறினர்.

> குற்றம் சுமத்துவதை விட குற்றத்தை நிரூபிப்பதுதான் சிறந்த வழி. இதில் நாம் இன்னுமொரு முக்கிய விடயத்தையும் கவனிக்க வேண்டும். சம்பவங்களை வைத்துக் கொண்டு மக்களிடையே இருக்கும் போராட்ட உணர்வை எவராலும் குன்றிவிடச் செய்ய முடி யாது. மக்கள் விடுதலைப் போராட்டங்களில் வெற்றிடங்களை ஏற் படுத்துவதால் போராட்டத்தை எவரும் நசுக்கி விட முடியாது. வெற் றிடத்தை நிரப்புவது ஏதோ ஒருவகையில் தொடரும் என்பதை கவ னத்தில் எடுப்பதன் மூலம் நிரந்தர தீர்வுக்கான வழியை தேடலாம். அதைவிடுத்துவன்முறைகளைத் தூண்டக்கூடிய செயல்களைச் செய் தால், வன் முறையை வன்முறையால் எதிர்கொள்வது தவிர்க்க முடி யாததாகிவிடும்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் மென்டிஸ் என அழைக்கப்படுபவர். இவர் புளொட் இயக்கத்துடன் பல ஆண்டுகளாக இருந்தவர். இவர்களை விசாரித்ததில் புலிகளே கடத்தலை செய்ததாக தகவல்கள் வெளியாகியதாகக் கூறும் பொலிஸார், சலீம் என்ற புளொட்டின் முன்னாள் உறுப்பினர் ஒருவரே கடத்தலை செய்வதில் முக்கியமானவர் எனத் தேடி வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பாரூக்கின் கடத்தல் பற்றி புளொட் இயக்க வட்டாரங்கள் கூறுகையில், புலிகளே பாரூக்கைக் கடத்தியதாக கூறுகின்றனர். ஆகவே...பாரூக்கை விடுதலை செய்ய வேண்டுமெனப் போராட்டமொன்றையும் செய்தனர்.

இந்த இரு கடத்தல் விவகாரங்களையும் பற்றி போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹொக்லண்ட் 15/12/2005 அன்று விடுதலைப்புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ஞானத்தைச் சந்தித்தபோது கேள்வியெழுப்பினார்.

ஞானம் பதிலளிக்கையில்- குறிப்பிட்ட சம்பவம் அரசபடையினரின் கட்டுப்பாட்டுக்குள் நடைபெற்றுள்ளது. இதற்குப் பொறுப்பாளிகள் அவர்களே. எமக்கும் -இதற்கும் எதுவிதத் தொடர்பும் இல்லை. மக்களை அச்சுறுத்தவும், பதற்றத்தை அதிகரிக்கச் செய்யவும், அதிகார தோரணையில் நடந்து கொள்ளவும் அவர்களே இதனைச் செய்திருக்கலாமென ஏன் நாம் சந்தேகிக்கக் கூடாது என்ற கேள்வியையும், ஞானம் பதிலளிக்கும் போது எழுப்பியிருந்தார். ஆகவே... ஒருவர் குற்றம் சுமத்த, மறு தரப்பு மறுப்பது ஒன்றும் புதிய விடயமல்ல. ஆனால் இதற்குக் காரணம் என்ன? இப்படியான சம்பவங்கள் தொடரக் கூடாதென்றால்... என்ன செய்ய வேண்டுமென்பது பற்றி அரச தரப்பினரே கவனம் செலுத்த வேண்டும்.

குற்றம் சுமத்துவதை விட குற்றத்தை நிரூபிப்பதுதான் சிறந்த வழி. இதில் நாம் இன்னுமொரு முக்கியவிடயத்தையும் கவனிக்க வேண்டும். சம்பவங்களை வைத்துக் கொண்டு மக்களிடையே இருக்கும் போராட்ட உணர்வை எவராலும் குன்றிவிடச் செய்ய முடி யாது. மக்கள் விடுதலைப் போராட் டங்களில் வெற்றிடங்களை ஏற்படுத்துவதால் போராட்டத்தை எவரும் நசுக்கிவிட முடியாது. வெற்றிடத்தை நிரப்புவது ஏதோ ஒருவகையில் தொடரும் என்பதை கவனத்தில் எடுப்பதன் மூலம் நிரந்தர தீர்வுக்கானவழியைத் தேடலாம். அதை விடுத்து வன்முறைகளைத் தூண்டக்கூடிய செயல்களைச் செய்தால், வன்முறையை வன்முறையால் எதிர் கொள்வது தவிர்க்க முடியாததாகி விடும்.

ஆகவே இது போன்ற பிரச்சினைகளைத் தடுக்க பாதுகாப்பை பலப்படுத்துகின்றோம் என மக்களைத் துன்புறுத்தாது, இது போன்ற செயல்கள் நடக்கக்கூடாதென்பதற்காக செயற்படுவது சிறப்பானதாகும். இவற்றை அரசாங்கத்தரப்பினர் கவனத்திலெடுக்காத வரை சம்பவங்களையும் தடுக்க முடியாது.

—கனகரவி—

# இராணுவ முற்றுகைக்குள் யாழ்.பல்கலைக்கழக சமூகம்

ஒரு உயிர் உன்னதமானது என்பதை நான் அறிவேன். ஆனால், உயிரிலும் உன்னதமானது எமது உரிமை, எமது சுதந்திரம், எமது கௌரவம் என்ற தேசியத் தலைவர் வே.பிர




பாகரனின் சிந்தனை வரிகளை இந்தப் பந்தியில் ஞாபகப்படுத்துவது பொருத்தமாக அமையும்.

கல்வியாளர் சமூகம், கல்விச் சட்டங்கள் இராணுவ மயமாக்கப்பட்ட சூழலில் அவமானம், அச்சுறுத்தலுக்குள் கல்வியைத் தொடரமுடியாது. அச்சுறுத்தலைச் சகித்துக் கொண்டபோதும் சுதந்திரத்தை, கௌரவத்தை இழந்து கல்வி கற்கமுடியாது.

இலங்கை அரசாங்கங்களின் பேரினவாத வெறிக்கு மாணவர்கள் பல்வேறு கட்டங்களில் இலக்காகினர். இந்த அடக்கியாளும் போக்கினாலே வெகுண்டெழுந்த மாணவ சமூகம் - தம் விதியை தாம் நிலைப்படுத்த முற்பட்டனர். இதன் விளைவாக புரட்சி கொண்ட மாணவ சமூகம் தோற்றம் பெற்று விடுதலை அமைப்பாகப் பரிணாமித்தது.

அன்று கட்டவிழ்த்துவிப்பட்ட கல்விச் சமூகம் மீதான தாக்குதல்கள் பல்வேறு வடிவங்களில் இடம்பெற்றன. படுகொலை, கைது செய்தல், சித்திரவதை, காணாமற்போதல் எனத் தொடர்ந்து - நவாலி, நாகர்கோவில் பாடசாலைகள் என கல்விக் கூடங்களிலும் குண்டுத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. அவை இன்று பல்கலைக்கழகம் வரை சென்றுள்ளமை கல்விச் சமூகத்தை கொதித்தெழச் செய்துள்ளது.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் இயல்பான கல்விச் சூழலுக்கு அனுமதிகோரியும், மாணவர்கள் தாக்கப்படுவதைக் கண்டித்தும் பல்கலைக்கழக சமூகம் ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தி, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் மகஜர் கையளிக்கத் தீர்மானித்தது.

திட்டமிட்டபடி யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்துக்கு முன்பாக பிரதான வாயிலால் பேரணி ஆரம்பமாகியது. துணைவேந்தர், துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்களுடன் அனைத்துப் பீட மாணவர்களும் என சுமார் 4 ஆயிரம் பேர் பேரணியில் திரண்டனர்.

தமக்கு இழைக்கப்பட்ட, இழைக்கப்பட்டு வருகின்ற அநீதிகளைத் தடுத்து நிறுத்துவதுடன், இராணுவம் பல்கலைக்கழக சூழலை இராணுவ மயமாக்கியதைக் கண்டிக்கும் வகையில் அமைதியான முறையில் இராமநாதன் வீதியால் வந்த பேரணி பரமேஸ்வராச் சந்தியால் திரும்பி, பலாலி வீதியால் சிறிய தூரம் சென்றதும் பேரணி படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டது.

ஏற்கனவே திட்டமிட்டிருந்த இராணுவ அணியினர் பலாலி வீதியிலுள்ள அரசடி இராணுவ காவலரண், பேருந்து தரிப்பிடம், நேர் சிங்ஹோம், எரிபொருள் நிரப்பு நிலையம், எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்பாகவுள்ள ஒழுங்கை என ஐந்துக்கும் மேற்பட்ட இடங்களில் தயார் நிலையில் மறைந்து இருந்தனர்.

இந்த இடங்களில் பெருமளவில் நின்ற இராணுவத்தினர் பேரணியில் ஈடுட்டோரை குறிவைத்துத் தாக்கும் நோக்கில், ஒரே நேரத்தில் வெளிப்பட்டனர். முகத்தைக் கறுப்புத் துணியால் மறைத்துக் கட்டியதுடன், இரும்புக் கம்பிகள், செயின்கள், பொல்லுகளுடன், துப்பாக்கியையும் உடனே இயக்கக் கூடிய தயார்நிலையில் வைத்துக்கொண்டு, பேரணியில் கலந்து கொண்டோரை முற்றுகையிட் டனர்.

இவை எதனையும் அறியாத பேரணியில் கலந்து கொண்ட பல்கலைக்கழக சமூகத்துடன், சர்வ தேசதமிழ் மாணவர் பேரவை அலுவலகத்தில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனும் இணைந்து கொண்டார்.

பேரணியில் கலந்த கொண்டோர் அமைதியான முறையில்சிவன் கோவில் வீதியால்திரும்ப முற்பட்ட வேளை மிகக் கொடூரமான முறையில் கல்விச்சமூகம் மீது தாக்குதல் தொடங்கியது. பொல்லுகள், கம்பிகள் கொண்டு தாக்கியதுடன், துப்பாக்கிப் பிரயோகம், கண்ணீர்ப் புகைக்குண்டுத் தாக்குதல்களையும் மேற்கொண்டனர். ஏதுமறியா மாணவ, மாணவிகள் சிதறி ஓடி நிலத்தில் வீழ்ந்தனர். நிலத்தில் வீழ்ந்தோரை சப்பாத்துக் கால்களால் பந்தாடிய படையினர் சகலரையும் கண்மூடித்தனமாகத் தாக்கினர்.

துணைவேந்தர், துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள் தம்மை அடையாளப்படுத்தி சிங்களம், ஆங்கில மொழிகளில் கத்தினர். மூர்க்கத்தனமாக மாணவர்கள் மீது நடத்தும் தாக்குதலை நிறுத்தும்படி கேட்டனர். இதனைப் பொருட்படுத்தாத இராணுவத்தினர் அவர்கள் மீதும் தடியடி, துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர். இதன்போது விரிவுரையாளர் பேரின்பநாதன் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்தார்.

விரிவுரையாளருடன் இரண்டு மாணவர்களும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகினர். இவர்களுடன் ஐந்து ஊடகவியலாளர்கள் உட்பட, 40 இற்கும் மேற்பட்டோர் மோசமாகத் தாக்கப்பட்டனர். அமைதியாக நியாயம் கேட்டுச் சென்றவர்களைத் துரத்தித் துரத்தித் தாக்கியதுடன், அவர்களிடமிருந்த கைத்தொலைபேசி, மற்றும் அடையாள அட்டைகளையும் பறித்துச் சென்றனர்.

நிகழ்வுகளைப் பதிவு செய்யச் சென்ற ஊடகவியலாளர்களை ஆயுதம் கொண்டு மிலேச்சத்தனமாகத் தாக்கியதுடன், அவர்களிடமிருந்த புகைப்படக் கருவிகளையும் அடித்து நொருக்கியுள்ளனர்.

அடக்கப்பட்டோர் அடக்குமுறைகளுக்கு எதிராகக் கிளர்ந்தெழும் இயங்கியல் விதிக்கமைவாக கல்விச் சமூகம் இன்று இராணுவத்துக்கு எதிராக அமைதியான போராட்டங்களை நடத்த தயாராகி வருகிறது. இதனால் உயர் கல்வி நிறுவனங்கள் உட்பட அனைத்து மாணவ சமூகமும் கற்றல் செயற்பாடுகளை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள் மாணவ சமூகத்துடன் ஒன்றிணைந்து பேரணியில் கலந்து கொண்டபோது, துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதும், விசேட பயிற்சி பெற்ற கொமாண்டோ படையினர் யாழ்.பல்கலைக்கழக வளாகத்துக்குள் நுழைந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதுடன், வளாகத்துக்குள் வைத்து விரிவுரையாளர்கள், மாணவர்களைக் கைது செய்தமை பல்கலைக்கழக வரலாற்றில் இதுவரை இடம்பெறாத கறைபடிந்த நிகழ்வாகும்.

அமைதியான வழியில் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியை ஆயுத முனையில் அடக்க முற்பட்டதுடன், துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு விரிவுரையாளர், மாணவர்களைப் படுகாயப் படுத்தியமையைக் கண்டித்து - மறுநாள் செவ்வாய்க்கிழமை பல்கலைக்கழக சமூகம் பகிஷ்கரிப்பை மேற்கொண்டது.

பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட மாணவர்கள் பல்கலைக்கழக வாளாகத்தில் நின்றனர். இதனைக் கேள்வியுற்ற கோப்பாய் பொலிஸார் மாணவர்களைச் சீண்டி வம்புக்கிழுக்கும் நோக்கில் வளாகத்துக்கு முன்பாக வாகனத்தை நிறுத்தி வேடிக்கை பார்த்தனர்.

இதனைச் சகிக்க முடியாத மாணவர்கள் வீதி மறியலை மேற்கொண்டனர். மாணவர்கள் மீது துப்பாக்கிப்பிரயோகம், கண்ணீர்ப் புகைக் குண்டுத் தாக்குதல்களை நடத்தியதுடன், யாழ்.பொலிஸ் நிலையத்தில் இருந்து மேலதிக பொலிஸாரை வரவழைத்து இராமநாதன் வீதியில் பெரும் களேபரத்தை ஏற்படுத்தினர்.

மாணவர்களின் வீதி மறியல் தொடரவே பலாலியில் இருந்த விசேட பயிற்சிபெற்ற கொமாண்டேப் படையினர் பவள் கவச வாகனம் சகிதம் வரவழைக்கப்பட்டனர். நியாயமற்ற முறையில் மாணவர்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம், கண்ணீர்ப்புகைக் குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டனர். அத்துமீறிப் பல்கலைக்கழக வளாகத்துக்குள் புகுந்த படையினர், கலைப் பீடாதிபதி அலுவலகம் வரை வந்து மாணவர்களை தாக்கினர்.

விரிவுரையாளர் ம.இளம்பிறையனுடன், இரண்டு மாணவர்களையும் கைது செய்து கடுமையாகத் தாக்கியதுடன், யாழ். பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்று அன்று மாலையே விடுதலை செய்தனர்.

இதனையடுத்து இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் - சரத்பொன்சேகா, யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி மற்றும் படைத் தளபதிகள், அதிகாரிகள் குழு பலாலிப் படைத்தளத்தில் உயர்மட்ட மாநாட்டில் பங்கு கொண்டனர். பொன்சேகாவின் உத்தரவின் பேரிலேயே பலாலியில் இருந்து விசேட கொமாண்டோ படையினர் பல்கலைக்கழகத்துக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை யாழ்.மாவட்டக் கட்டளைத்தளபதி சந்திர சிறியின் கருத்தையும் இதில் குறிப்பிடுவது பொருத்தமாக அமையும். எனது கைகள் கட்டப்பட்டு - முடிவுகள், கட்டளைகள்யாவும் தென்பகுதியில் இருந்தே வருகின்றன. என்னால்ஒன்றும்செய்ய முடியாது என்ற இவரது கூற்று என்ற பல செய்திகளை சொல்லவே செய்கிறது.

**ஈழவன்**

# யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப்பிரிவின் பொருத்தமற்ற கல்வி நடவடிக்கைகள்

சேவைமுன் பயிற்சிமூலம் ஆசிரியர்களை உருவாக்குவதற்கான கல்வியியற்கல்லூரி பயிற்சித் திட்டத்தில் வடக்கு - கிழக்கில் 1993 ஆம் ஆண்டு வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து மட்டக்களப்பு, அட்டாளைச்சேனை, யாழ்ப்பாணம் ஆகிய தேசிய கல்வியியற் கல்லூரிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இத்தேசிய கல்வியியற் கல்லூரிகளிலிருந்து பயிற்சி முடித்து வெளியேறும் ஆசிரியர்களுக்கு கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பட்டம் வழங்கப்பட்டு வருகிறது. இவர்கள் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்காக - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்களின் அரிய முயற்சியால் யாழ்.பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப்பிரிவில் ஒரு வருட விலக்களிப்புடன் கலைமாணிப் பட்டத்தைப் பெறுவதற்கு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்தது.

கலைமாணிப் பட்டக்கற்கை நெறியானது கலை முதற்தேர்வு (Firstin arts) கலைமாணி-பகுதி - 1 (B.A.Part1) கலைமாணி-பகுதி2 (B.A.Patr- 2) எனும் மூன்றாண்டு கற்கைநெறியாகும். தேசிய கல்வியியற் கல்லூரி பயிற்சி நெறியானது பயிற்சிக் காலத்துடன் மூன்றாண்டுகளை உள்ளடக்கியிருப்பதால், ஒரு பட்டக்கற்கை நெறிக்குரிய அடிப்படைத் தகைமையைக் கொண்டிருப்பது கருதிய முன்னாள் துணைவேந்தர் அவர்கள் மூன்றாண்டுக் கலைமாணித் தேர்வில் முதலாம் ஆண்டு கலைமாணித் தேர்வில் முதலாமாண்டு கலைமுதற் தேர்வினை (first in arts) விலக்களிப்பு செய்திருந்தார். இதனால் கல்வியியற் கல்லூரிகளிலிருந்து வெளியேறியவர்கள், யாழ்.பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப்பிரிவில் பதிவு செய்வதன் மூலம் நேரடியாக B.A-Part-1 முதலாம் வருடத்திலும், B.A- Part-2ஐ இரண்டாம் ஆண்டிலும் பூர்த்திசெய்வதன் மூலம் இரண்டு ஆண்டுகளில் பொதுக் கலை மாணிப்பட்டத்தைப் பெறுவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டிருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அடுத்து வந்த தொடர் ஆண்டுகளில் பல அணிகள் பட்டம் பெற்று வெளியேறியுள்ளன.

இதன்பிரகாரம் 2000ஆம் ஆண்டு பதிவுகளை மேற்கொண்ட எமக்கு 2001ஆம் ஆண்டு பொதுக்கலைமாணி பகுதி 1 தேர்வுக்கு தோற்றுவதற்கு பதிவேடு வழங்கப்பட்டிருந்தது. இப்பரீட்சைக்கான விண்ணப்பம் கோரப்பட்டு பரீட்சைக்கும் விண்ணப்பித்திருந்தோம். பரீட்சையை எதிர்பார்த்து தயாராகிக் கொண்டிருந்த வேளை, 2003ஆம் ஆண்டு வெளிவாரிப் பிரிவு நிர்வாக அலகுகள் மாற்றமடைந்ததுடன் மேற்படி பிரிவினருக்கான பரீட்சை ஒழுங்குகளும் மாற்றமடைந்தது. இந்தக் காலப்பகுதியில் புதிய இணைப்பாளர் அவர்களின் தன்னிச்சையான முடிவினால் நாம் அனைவரும் கலைமுதற்தேர்வுக்கு தோற்ற வேண்டும் எனப் பணிக்கப்பட்டோம். இது வெவ்வேறு தேவைகளுக்காக இணைப்பாளரைச் சந்திக்க சென்ற வேளை, எம்முடன் ஒத்த பாதிக்கப்பட்டவர்களுக்கு தனிப்பட்ட ரீதியில் தெரிவிக்கப்பட்டிருந்ததே தவிர, ஏனையவர்களும் அறியும் வண்ணம் வெளிவாரி பிரிவினால் உத்தியோக பூர்வமாக எவ்வித அறிவித்தலும் வழங்கப்படவில்லை.

இப்புதிய நடைமுறையினால் 2001ஆம் ஆண்டு (B.APart-1)இற்கு விண்ணப்பித்திருந்தவர்களும் 2001ஆம் ஆண்டு (B.APart-2) இற்கு விண்ணப்பித்திருந்தவர்களும் அகப்பட்டு பாதிக்கப்பட்டனர். பாடத்திட்டம், பரீட்சை ஒழுங்கு முறைகள் மாற்றமடையும் போது, இடைக்காலப் பகுதியில் பாதிப்படையும் மாணவர்களையும் கருத்தில் எடுப்பது ஒரு கல்வி நிறுவனத்தின் தார்மீக கடைமையாகும். இருந்தபோதும், எவ்வித தவறும் செய்யாத இவ்விரண்டாண்டு மாணவர்களையும் கலைமுதற்தேர்வுக்கு (First in arts) தோற்றவேண்டுமென வெளிவாரிப் பிரிவு புதிய நிர்வாகம் வலிந்து நிர்ப்பந்தித்தது. இதனால் பரீட்சையை எதிர்பார்த்துக் காத்திருந்த நாம் ஆழ்ந்த மனவேதனைக்கும், மனவிரக்திக்கும் உட்பட்டோம்.

உத்தியோகப்பற்றற்ற இந்தத் தகவலை அறிந்து அதனை உறுதிப்படுத்துவதற்காக இணைப்பாளரை அணுகி, இவ்விடயம் தொடர்பாகக் கேட்டபோது அவர் எமது பதிவேட்டின் பிரகாரம் B.A-Part-1 / B.A -Part-2 இற்கு தோற்றுமாறும் கலைமுதற்தேர்வை இடைக்காலப் பகுதிக்குள் பூர்த்திசெய்தால் போதுமானதெனவும் குறிப்பிட்டிருந்தார்.

இதன் பிரகாரம் இவ்விரு அணிகளும் 2002ஆம் அண்டுக்குரிய கலைமுதற்தேர்வு 2005ஆம் ஆண்டு ஆவணியில் நடைபெற்றபோது தோற்றியிருந்தோம். இதில் 2001 ஆம் ஆண்டு B.A-Part-2 இற்கு தோற்றிய அணி இறுதிப்பரீட்சையாகவே கலைமுதற்தேர்வில் தோற்றியது. 2001ஆம் ஆண்டு B.A- Part-1 இற்கு தோற்றிய அணியாகிய நாம் இடைப் பரீட்சையாகவே கலைமுதற்தேர்வில் தோற்றியுள்ளோம். இவ்வாறு பரீட்சைகளை ஒழுங்கற்ற முறையில் எதிர்கொள்வதன் மூலம்-பல்வேறுபட்ட இடர்பாடுகளையும், அசௌகரியங்களையும் எதிர்நோக்கியுள்ளோம். எமது தரப்பில் நியாயத்தன்மையும் பாதிப்பும் இருந்தபோதும், ஒரு உயர்கல்வி நிறுவனத்தின் கல்வியியலாளர்களுக்கு கீழ்ப்படிய வேண்டும் என்ற உயர்நோக்கில் எவ்வித எதிர்ப்பு நடவடிக்கையையோ, சட்ட நடவடிக்கையையோ மேற்கொள்ளாது 2005ஆம் ஆண்டு ஆவணியில் நடைபெற்ற கலைமுதற் தேர்வுக்குத் தோற்றினோம்.

இதனைத் தொடர்ந்து கடந்த ஆவணி 2005இல் B.A- Part- 2 2002ஆம் ஆண்டு பரீட்சைக்குரிய விண்ணப்பம் பத்திரிகை வாயிலாக கோரப்பட்டிருந்தது. இதனைக் கருத்திற் கொண்டு எமது பதிவேட்டின் பிரகாரம் நாம் பரீட்சைக்கு விண்ணப்பிக்கச் சென்றபோது உதவிப்பதிவாளரினால் நாம் இவ்வாண்டு பரீட்சையில் தோற்றமுடியாது எனவும், அடுத்த ஆண்டிலேயே தோற்றுவதற்கு தகுதியுடையவர்கள் எனவும் உத்தியோகப்பற்றற்ற முறையில் தன்னிச்சையாக புதியதோர் சர்ச்சை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எம்மோடு 2001 ஆம் ஆண்டுக்குரிய B.A-Part- 1 இல் தோற்றிய கல்வியியற்கல்லூரி சாராத வெளிவாரி மாணவர்கள் B.A- Part-1 பரீட்சைக்கு விண்ணப்பிக்க அனுமதிக்கப்படுகின்றபோதும் எமக்கு அனுமதி மறுக்கப்படுகின்றமை எந்தவிதத்திலும் நியாயப்படுத்த முடியாதொன்றாகும். இந்த நியாயப்பாடு தொடர்பாக உதவிப் பதிவாளர்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு கேட்டபோது, அது பழைய நிர்வாகத்தின் தவறு எனவும், அதற்கான தீர்வை அவர்களிடம் சென்று பெறுமாறும் எமக்கு அறிவுறுத்துகின்றார்கள்.

கலைமுதற்தேர்வு விலக்களிப்பு தொடர்பான சர்ச்சை வெளிவந்த அதேவேளையிலேயே இந்தப் பிரச்சினை தொடர்பாகவும் கூறியிருந்தால் இந்தக் காலதாமதமாகும் கற்கைநெறியை கைவிட்டு, பட்டத்தினை பெற்றுக்கொள்ளக் கூடிய பிறிதொரு மார்க்கத்தைக் கையாண்டிருக்க முடிந்திருக்கும்.

இவ்வாறாக

1. நீண்ட காலமாக நடை முறையிலிருந்த கலைமுதற்தேர்வு விலக்களிப்பு எவ்வித முன்னறிவித்தலும் இன்றித் தன்னிச்சையாக நிறுத்தப்பட்டமை.
2. ஒழுங்கற்ற முறையில் பரீட்சையில் தோற்றும்படியான நிர்ப்பந்தத்துக்கு ஆளானமை.
3. விலக்களிப்பு நீக்கப்பட்ட காலப் பகுதிக்குள் அகப்பட்டு, பாதிக்கப்பட்ட இரு அணியினருக்கும் எவ்வித மாற்று நடவடிக்கையும் மேற்கொள்ளாமை.
4. அதைவிட உச்சக்கட்டமாக முன்னறிவித்தலின்றி B.A- Part- 1 பரீட்சைக்குத் தயாராக இருந்த எம்மை பரீட்சைக்கு விண்ணப்பிக்க விடாது தடுத்தமை.


போன்ற உத்தியோகப்பற்றற்ற முறையில் அடிக்கடி வாய்மூலமாக அமுல்படுத்தப்படுகின்ற புதிய புதிய நடைமுறைகளின் காரணமாக, எமது எதிர்கால கல்வி வளர்ச்சியின் நிச்சயமற்ற தன்மையால் தொடர்ச்சியாக உளத்தாக்கத்துக்கு உள்ளாக்கப்பட்டு வருகிறோம். இதற்குச் சம்பந்தப்பட்ட தரப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

**யாழ் - நிருபன்**

# சுனாமி அழிவின் முதலாண்டு நினைவுக் காட்சிகள்



உடுத்துறை நிகழ்வில் அஞ்சலி செலுத்தும் பிரமுகர்கள்




உடுத்துறையில் நினைவுச் சுடரேற்றுகிறார் தளபதி கலாத்தன்



உடுத்துறையில் கதறியழும் உறவுகள்








அம்பாறையில் சுனாமியால் உயிரிழந்தோருக்கான நினைவுச் சின்னத்தில் அஞ்சலிசெலுத்தும் உறவுகள்



கிளிநொச்சி நிகழ்வில் அஞ்சலி செலுத்தும் உறவுகள்






முல்லைத்தீவில் பெற்ற மகளுக்காக கட்டிய கல்லறையில் அஞ்சலி செலுத்தும் தந்தையும் அவரது மகளும்



மட்டக்களப்பில் நினைவுச்சுடர்




இந்தோனேசியாவில் அஞ்சலி செலுத்தும் மக்களுடன் ஜனாதிபதி




இந்தோனேசியாவில் தொலைந்துபோன உறவுகளைத் தேடும் இருவர்.



தமிழகத்தில் கதறியழும் தாய்மார்.




தாய்லாந்தில் தனது உறவைத் தொலைத்த சுற்றுலாப் பயணி.



ஹிக்கடுவயில் ஏற்றப்படும் நினைவுச்சுடர்.







1000 பயணிகளுடன் சென்ற ரயிலைத் துவம்சம் செய்த பெரலியவில் சமய நிகழ்வு நடைபெறுவதையும் அங்கு அமைக்கப்பட்டுள்ள நினைவுச் சின்னத்தையும், இந்த அஞ்சலி நிகழ்வில் பங்கேற்ற ஜனாதிபதி மகிந்த மற்றும் முப்படைத் தளபதிகளும்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## பொலிஸ்...

வைத்தியசாலையில் மரணமானார்.

உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் அமைந்துள்ள புதுநகரிலிருந்த இந்தப் பொலிஸ் காவலரண் மீது நான்கு ஆயுதபாணிகளால் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

வலையிறவு விமானப் படைத் தளத்துக்கு பாதுகாப்பாகவே இந்தக் காவலரண் அமைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## ஓட்டோ சாரதிகள்...

இன்பரத்தினம் ரமணன் என்ற ஓட்டோ சாரதியே உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக உப்புவெளி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதேவேளை, திருகோணமலை 4ஆவது மைல்கல் என்ற இடத்தில் நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் ஜெயசுந்தரம் விஜேசீலன் (வயது 39) என்ற ஓட்டோ சாரதி இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சீனன்குடா பொலிஸார் விசரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சிரேஷ்ட...

இறம்பைக்குளத்திலுள்ள புளொட் முகாமிலிருந்து திருப்பதி மாஸ்ரர் என்ற புளொட் சிரேஷ்ட உறுப்பினர் இன்னொருவருடன் தேநீர் கடையொன்றுக்குச் சென்றபோது - அங்கு காத்திருந்த ஆயுதபாணி ஒருவர் அவர்கள் மீது துப்பாக்கிச் சூட்டை நடத்தினார்.

கடையில் தேநீர் வாங்கிக் குடித்துக் கொண்டிருந்தபோது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் திருப்பதி மாஸ்ரர் என்ற வீரப்பன் திருப்பதி (வயது 52) என்ற புளொட் உறுப்பினர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மரணமானார்.

இவருடன் சென்ற இன்னொரு புளொட் உறுப்பினர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் பாதுகாப்புக் காரணங்களுக்காக அனுராதபுரத்துக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

இந்தச் சம்பவத்தையடுத்து விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பொலனறுவவில் சுட்டுக் கொலை

பொலனறுவ—

பொலனறுவ மாவட்டத்திலுள்ள குடாபொக்கணை கிராமத்தில் முஸ்லிம் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்று முன்தினம் இரவு 10.15 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ஏ.எச்.சாய்பு (வயது 45) என்ற குடாப் பொக்கணை வாசியே கொல்லப்பட்டவராவார்.

வீட்டில் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தபோதே இவர் சுட்டுக் கொல்லப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# வெட்டுப் புள்ளி இன்று வெளியாகும்!

யாழ்ப்பாணம்—

பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளி விபரங்கள் இன்று வெளியிடப்படும் என்று பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இந்த விபரங்கள் வெளியிடப்பட இருந்ததாகவும், கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் மீள் பரிசீலணை செய்யப்பட்டு புள்ளிவிபரத்தாள் சமர்ப்பிக்கப்படுவதில் தாமதம் ஏற்பட்டதால் இன்று வெளியிடப்படும் என்றும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

# சடலங்களை அடையாளம் காணக் கோரிக்கை!

யாழ்ப்பாணம்—

யாழ். வைத்தியசாலையின் பிரேத அறையில் ஒரு பெண்ணினதும், இரண்டு ஆண்களினதும் அடையாளம் காணப்படாத சடலங்கள் உள்ளன.

உறவினர்கள் தயவுசெய்து அடையாளம் கண்டு இந்தச் சடலங்களைப் பொறுப்பேற்றுக் கொள்ளும்படி வைத்தியசாலை பணிப்பாளர் சு.ரவிராஜ் கேட்டுள்ளார்.

சடலங்களில் காணப்படும் உடை பற்றிய விபரங்கள் வருமாறு.

பெண் - நீல டெனிம், நீல ரீசேட் (வயது அண்ணளவாக 25)

ஆண் 1) - நீல டெனிம் நீல சேட் (வயது அண்ணளவாக 24)

ஆண் 2) - கறுப்பு ரவுசர், பிறவுண் ரீசேட், கையில் வெள்ளி சங்கிலி (வயது அண்ணளவாக 25)

# ஈ.பி.டி.பி. உறுப்பினரை காணவில்லையாம்!

யாழ்ப்பாணம்—

ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் ஊர்காவற்துறையில் காணாமற் போயிருப்பதாக பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாபுஜி எனப்படும் ராஜசிங்கம் என்ற ஈ.பி.டி.பி. உறுப்பினரையே கடந்த 20 ஆம் திகதி முதல் காணவில்லை என்று முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## குடாநாட்டில்...

கொடிகாமம் பொலிஸார் இந்தத் தகவலை நிராகரித்தனர்.

இதேவேளை, யாழ்.நகரில் கைலாசபிள்ளையார் கோவிலடிப் பகுதி காவலரண் மீது நேற்று 6.15 மணியளவில் கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டது. இதன்போது படையினர் சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்தனர்.

அத்துடன், நல்லூர் பகுதியில் வீதியால் சென்றோரையும் படையினர் தாக்கியதாக தெரியவருகிறது.

இதற்கிடையில், நேற்று மாலை 6.50 மணியளவில் யாழ்.இந்துக் கல்லூரிக்கு அருகே படையினர் மீது கைக்குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது. இதன் பின்னர் அந்தப் பகுதியில் தொடர்ச்சியான துப்பாக்கிச் சத்தங்கள் கேட்டன.

இதன்போது சேதங்கள் எதுவும் ஏற்பட்டதா என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை.

## யாழ்.குடாநாட்டில்...

விடுத்துள்ளது.

கறுப்புக் கொடிகளைக் கட்டியும், சோக கீதங்களை இசைத்தும் தமிழ் மக்கள் இன்றைய துக்கதினத்தை அனுஷ்டிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இயல்பு வாழ்க்கையைப் பாதிக்காதவகையில் - இந்தத் துக்கதினத்தை அனுஷ்டிக்குமாறும் - வீதித் தடைகள், ரயர் எரிப்புக்களைத் தவிர்த்துக் கொண்டு பொதுவான துக்கதினத்தை செயற்படுத்துமாறும் கேட்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இன்று ஹர்த்தால் என்று பரவலான வதந்தி பரவிய போதும் - அவ்வாறு ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்றும், பூரண துக்கதினத்துக்கான அழைப்பே விடுக்கப்பட்டுள்ளதாகவும் தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் தெரிவித்தது.

## ஜோசப் எம்.பி...

சமாதான முயற்சிகள் பாதிப்படையும் அபாயநிலை தோன்றியுள்ளது. எனவே, இந்த துணைக்குழுக்களின் உறவுகள் அனைத்தையும் அகற்றுவதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

இவ்வாறு செய்வதன் மூலமே சமாதான முயற்சிகளில் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## படையினரின்...

தாக்குதல் நடத்தப்பட்டதை அடுத்து தாம் மேற்கொண்ட பதில் தாக்குதலிலேயே இவர்கள் இருவரும் உயிரிழந்ததாக பொலிஸாரிடம் படையினர் தெரிவித்தனர்.

சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் இரண்டும் அடையாளம் காணப்படவில்லை. இந்தச் சம்பவம் நேற்றுக்காலை 10.30 மணியளவில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் எனச் சந்தேகிக்கப்படும் இளைஞர் ஒருவரை விசேட அதிரடிப்படையினர் கடந்த வெள்ளிக்கிழமை கைதுசெய்து பொத்துவில் பொலிஸாரிடம் ஒப்படைத்ததாகப் படையினர் தெரிவித்தனர்.

# சுனாமியால் உயிரிழந்தோருக்கு...

ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ந்து யாழ்.போதனா வைத்தியசாலையின் நடமாடும் இரத்தவங்கிக்கு பருத்தித்துறை முனைப் பகுதியைச் சேர்ந்த 200 இற்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் இரத்ததானம் செய்தனர்.

இதேவேளை - பருத்தித்துறை - தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயத்தில் பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் தலைமையில் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

இதேவேளை - யாழ்.குடாநாட்டில் மோசமாகப் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு மணற்காடு கிராமத்தில் உயிரிழந்தவர்களின் நினைவுநிகழ்வு - உயிரிழந்வர்களில் 72 பேர் புதைக்கப்பட்ட சேமக்காலையில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

அருட்திரு டேமியன் அடிகளாரால் மணற்காடு புனித அந்தோனியார் தேவாலயத்திலும் விசேட பூசைகள் நடத்தப்பட்டன.

அத்துடன், ஶ்ரீவல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானத்திலும் நேற்று காலை விசேட பூசைகள் இடம்பெற்றதோடு வடமராட்சி பிரதேசத்தின் கரையோரப் பகுதிகளிலும், ஆலயங்களிலும் நினைவு நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இதேவேளை - சுனாமியால் உயிரிழந்தவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் நேற்று உடுத்துறையில் சுனாமியால் உயிரிழந்தோர் சமாதி அருகில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை தமிழீழ கடற்புலிகளின் மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் பூரணி ஏற்றிவைத்தார்.

தமிழீழ தேசியக் கொடியை ஆழியவளை திலீபன் மருத்துவமனைப் பொறுப்பதிகாரி இசைவிழி ஏற்றிவைத்தார்.

பிரதான சுடரை தமிழீழ கடற் புலிகளின் தளபதி மங்களேஸ் ஏற்றினார். சிறப்புரையை தூயவன் அரசறிவியல் கல்லூரி அதிபர் அரசண்ணா, தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர் கா.வே.பாலகுமாரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

நேற்றுக்காலை 7 மணிக்கு முன்னரே கல்லறைகளின் முன் கூடிய பொதுமக்கள் தம் உறவுகளை நினைத்து கதறி அழுதனர்.

இந்தப் பிரதேசத்தில் உயிரிழந்தவர்களின் நினைவாக 1300 தீபங்கள் உறவினர்களால் ஏற்றப்பட்ட வேளை - பலர் மயங்கி கிழே விழுந்தனர்.

உடுத்துறையில் இரு இடங்களிலும், வத்திராயனில் சுமைதாங்கி, 10 ஆம் வட்டாரம் ஆகிய இடங்களில் சுனாமியால் உயிரிழந்வர்களின் சடலங்கள் புதைக்கப்பட்ட இடங்களில் சுமார் 5 ஆயிரம் வரையான மக்கள் கூடி அஞ்சலி செலுத்தினர்.

சுனாமியால் உயிர்நீத்த முல்லைத்தீவுமக்களின் நினைவாக அழிவடைந்த முல்லைத்தீவு புனித இராயப்பா தேவாலயத்தில் அமைக்கப்பட்ட நினைவாலயத் திறப்புவிழா நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

நினைவாலயத்தில் தமிழீழ கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை பொதுச் சுடரை ஏற்றி வைக்க, யாழ். மாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, முல்லை மாவட்ட அரசாங்க அதிபர் மேரி இமெல்டா சுகுமார், முஸ்லிம் மௌலவி முத்து முகமது ஆகியோர் சுடரை ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை ஏற்றினார்.

நினைவாலய நுழைவாயிலை கரைத்துறைப்பற்று விசேட ஆணையாளர் இ.கிருஸ்ணபிள்ளை திறந்து வைத்தார்.

நினைவாலயத்தை வடிவமைத்த பொறியியலாளர் ஜெயசீலன், முல்லை மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் அ.மரியராசா ஆகியோர் திரைநீக்கம் செய்ய, நினைவாலயத்தை யாழ். மாவட்ட ஆயர் திறந்து வைத்தார்.

உயிரிழந்தவர்கள் நினைவாக நற்கருணைத் திருப்பலி வழிபாட்டை தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை நிகழ்த்தினார்.

அங்கு சுனாமியால் உயிர் நீத்த மக்களின் உணர்வலைகள் பொதிந்த ஆவணம் வெளியிடப்பட்டது.

'ஆழிப்பேரலைக்குள் ஒரு தேடல்' என்ற நூலை தோமஸ் சவுந்தரநாயம் ஆண்டகை வெளியிட்டு வைக்க, அருட் தந்தை திருமகன் பெற்றுக் கொண்டார்.

ஈழநாதம் செய்தியாளர் லோகீசனின் 'அலையின் வடுக்கள்' என்ற நூலை கேணல் சூசை வெளியிட, முல்லைத்தீவுப் பங்குத் தந்தை ஜேம்ஸ் பெற்றுக் கொண்டார்.

'சுனாமி சொல்லாத சோகங்கள்', 'நம்பிக்கையின் பாதையில்' என்ற இரு நூல்களும் வெளியிடப்பட்டன.

கேணல் சூசை, மௌலவி முத்து முகமது, முல்லைத்தீவு அரச அதிபர் மேரி இமெல்டா சுகுமார் ஆகியோர் இங்கு உரை நிகழ்த்தினர்.

புதுக்குடியிருப்பில் ஆழிப்பேரலையில் உயிர்நீத்தவர்களின் நினைவாகப் புதுக்குடியிருப்பில் நினைவுச் சதுக்கம் திறப்பு விழாவும், நினைவு நாள் நிகழ்வுகளும் நேற்று மாலை 4 மணிக்கு நடைபெற்றது.

பொதுச்சுடரினை புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் செ.தயானந்தா ஏற்றிவைக்க தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ அரசியல் துறைப் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றிவைத்தார்.

நினைவுச் சதுக்கத்திற்கான பெயர்ப் பலகையை புதுக்குடியிருப்பு வணிகர் கழக போசகர் பே.கந்தசாமி திரைநீக்கம் செய்து வைத்தார். நினைவு சதுக்கத்தினை செ.முகுந்தன் நாடாவை வெட்டி திறந்துவைத்தார். நினைவுச் சதுக்கத்தில் நினைவுச் சுடரை முல்லை மாவட்ட அரசியற் துறைப்பொறுப்பாளர் செம்மணன், ஏற்றிவைக்க, தொடர்ந்து உறவினர்களால் சுடர்ஏற்றப்பட்டு மதவழிபாடு நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சுண்டிக்குளம் பகுதியில் சுனாமியால் உயிரிழந்த 33 பேர்களது ஓராண்டு நினைவு நிகழ்வு கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கல்லாற்றுக் கிராமத்தில் நடைபெற்றது.

கண்டாவளை பிரதேச செயலர் சி.சத்தியசீலன் இந்த நிகழ்வுக்கு தலைமைவகித்தார். பொதுச் சுடரை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் ஏற்றிவைத்தார். தேசியக் கொடியை விசுவமடு பிரதேச அரசியற் துறைப்பொறுப்பாளர் சோழநிலவன் ஏற்றிவைத்தார். சுடர்களை சமயத் தலைவர்கள் ஏற்றி வைத்தனர்.

திருகோணமலையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட ஈச்சிலம் பற்றைச் சேர்ந்த 34 குடும்பங்களுக்கு நேற்று தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் அமைக்கப்பட்ட நிரந்தர வீடுகள் கையளிக்கப்பட்டன. வீடுகளை திருகோணமலை மாவட்ட அரசியற் துறைப்பொறுப்பாளர் சி.எழிலன் வழங்கினார். இந்த நிகழ்வில் சுடர்கள் ஏற்றப்பட்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளும் நடத்தப்பட்டன. திருகோணமலை மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் நினைவு சுடர்கள் ஏற்றப்பட்டு ஆத்மசாந்தி வேண்டி பிரார்த்தனைகளும் நடைபெற்றன. திருகோணமலை மெதடிஸ்த பெண்கள்கல்லூரி, விக்னேஸ்வரா வித்தியாலயம், ஶ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி ஆகியவற்றில் பாடசாலை சமூகத்தினரால் தீபங்கள் ஏற்றப்பட்டு ஆத்ம சாந்தி வேண்டி பிரார்த்தனைகள் நடத்தப்பட்டன.

திருகோணமலை 10ஆம்குறிச்சி விவேகானந்தா மீனவர்சங்கத்தால் கடலில் தீபம் ஏற்றப்பட்டு ஆத்ம சாந்தி வேண்டி பிரார்த்தனை நடத்தப்பட்டது.

திருகோணமலை கிருஷ்ண பகவான் ஆலயத்திலும் தீப வழிபாடு நடத்தப்பட்டது. லிங்கநகர் கோணலிங்க ஆலயத்திலும் மூதூர் கிழக்கு நிகொட் நிறுவனத்திலும் ஆத்ம சாந்தி வேண்டி பிரார்த்தனை நடைபெற்றுள்ளது.

சமூகவலயமைப்பு நிறுவனத்தால் திருகோணமலை சிறுவர் பூங்காவில் வடிவமைக்கப்பட்ட கப்பலில் சுடர்கள் ஏற்றப்பட்டு பின்னர் கடலில் விடப்பட்டது.

## மாமனிதர்...

வித்தியாலய மண்டபத்தில் பொதுமக்களின் வணக்கத்துக்காக வைக்கப்பட்டிருந்தது. வித்துடலுக்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் கண்ணீர் மல்க வணக்கம் செலுத்தினர்.

கரடியனாற்றில் நேற்றுப் பிற்பகல் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் புகழுடல் அஞ்சலிக்கு வைக்கப்பட்டது. இந்த அஞ்சலி நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் தயா மோகன், மட்டக்களப்பு மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் பானு, தளபதி பிரபா, தளபதி ஜெயார்த்தன் உட்பட விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களும், பொதுமக்களும் கலந்து கொண்டு தமது இறுதி அஞ்சலிகளைச் செலுத்தினர்.

அங்கிருந்து பூதவுடல் தாங்கிய பேழை பட் டிருப்புப் பாலத்தின் ஊடாக களுவாஞ்சிக்குடிக்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கு அஞ்சலி செலுத்தப்பட்ட பின்னர் மட்டக்களப்புக்கு கொண்டுவரப்பட்ட வித்துடல், இன்று வன்னிக்கு எடுத்துவரப்படவுள்ளது.

வவுனியாவில் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட பின்னர் நாளை கிளிநொச்சிக்கு எடுத்துவரப்படும் புகழுடல், பிற்பகல் 3 மணியளவில் கிளிநொச்சியில் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

தொடர்ந்து முல்லைத்தீவுக்கு மக்கள் அஞ் சலிக்காக எடுத்துச்செல்லப்படும். அதன்பின்னர் இறுதி நல்லடக்கத்துக்காக மட்டக்களப்புக்கு எடுத்துச் செல்லப்படும்.

மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமான், மேலக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் ஆகியோர் இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக கிளிநொச்சிக்கு வரவுள்ளதாக செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை - ஜோசப் பரராஜசிங்கத்தின் மகனும், மகளும் வெளிநாட்டில் இருந்து நாடு திரும்பியுள்ளனர். அவரின் மற்றொரு மகன் இன்று நாடு திரும்பவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. நல்லடக்க நிகழ்வு எதிர்வரும் வியாழன் மட்டக்களப்பு - கள்ளியங்காடு கத்தோலிக்க சேமக்காலையில் இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

CATWAS.COM
COMPUTER ACADEMY
No.26, Somasundram Avenue, Chundukuli, Jaffna.
TP: 021 222 3805
புதிய ஆண்டிற்கான புதிய பிரிவு ஆரம்பம்

| DIPLOMA COURSES | | CERTIFICATE COURSES | |
|---|---|---|---|
| Ms Office | 1750/= | Word | Power Point |
| DTP | 2000/= | Excel | Photo Shop |
| Hard Ware | 1750/= | Access | Page Maker |
| Web Designing | 3000/= | HTML | Corel Draw |

O/L பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கான விசேட பிரிவில் அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் அவர்களுக்கான பதிவுகளையும் கீழ் குறிப்பிட்ட திகதிக்கு முன் பதிவுகளை மேற்கொள்ளவும்.
27.12.2005 தொடக்கம் 29.12.2005 வரை பதிவை மேற்கொள்ளவும்.

இப்பத்திரிகை இல.267 , நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 27.12.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.